Registered as a news paper. இலவசப் பிரதி
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 19 ஆம் நாள் (05.10.2002) சனிக்கிழமை இதழ் : 05

**ஓட்டோ சப்ளயர்ஸ்**



மிகத் துல்லிய
றீபோறிங் றீகிறைன்டிங்
வேலைகளுக்கும்
அனைத்து Japan போல்
பெயரிங்குகளுக்கும்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021-2222047
(சி/004)




# புலிகளிடம் சரணடைந்த படைச் சிப்பாய் கண்காணிப்புக் குழுவிடம் கையளிப்பு !

(உமேஷ், குருநகர் நிருபர்)

**இராணுவத்தை விட்டுத் தப்பியோடி வந்து விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார்.**

இச்சிப்பாயை விடுவிக்கும் நிகழ்வு நேற்று விடுதலைப்புலிகளின் யாழ். அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டப் பிரதிநிதி, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதி, ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மாத்தறையை சேர்ந்த இரட்ணாயக்கா ஜெகத் ருவான்குமார என்ற இந்த இராணுவச் சிப்பாய் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் மயிலிட்டி இராணுவ முகாமிலிருந்து எவருக்கும் தெரியாமல் வெளியேறி தப்பியோடியதாகவும் இரவல் பற்றைப் பகுதியாகக் காணப்பட்ட ஓர் இடத்தில் தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. பின்னர் மீண்டும் வியாழன் காலையில் தனது பயணத்தை ஆரம்பித்த இவர் காலை 10 மணியளவில் கொக்குவில் பொற்பதி வீதியிலுள்ள விடுதலைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிய உயர்மட்டக் குழு தமிழ்ச்செல்வனைச் சந்திக்கும்

(கிளிநொச்சி)

ஜப்பானிய உயர்மட்டக் குழுவொன்று வடக்கு - கிழக்கில் தேவைகள் குறித்து பகுப்பாய்வதற்காக 8 ஆம் திகதியன்று வன்னி வரவுள்ளது.

வன்னிக்குச் செல்லும் இக்குழு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளது.

பின்னர் 9 ஆம் திகதி இக் குழுவினர் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

## இராணுவத் தொழிலை விட விவசாயம் செய்து பிழைக்கலாம்

### விடுவிக்கப்பட்ட சிப்பாய் கருத்து

(நமது நிருபர்)

"நான் ஏற்கனவே இராணுவத்தை விட்டுத் தப்பியோடியவன். தப்பியோடி எனது சொந்த ஊரான மாத்தறை கபரான பகுதியில் குடும்பத்தினருடன் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு இராணுவத்தில் இணைவதற்காக அனுப்பி வைக்கப்பட்டேன்."

இவ்வாறு, தப்பியோடி வந்து - புலிகளிடம் சரணடைந்து நேற்று விடுவிக்கப்பட்ட இராணுவச் சிப்பாயான ஜெகத் ருவான்குமார (வயது 26) நமது ஈழநாடு நிருபருக்குத் தெரிவித்தார்.

தனது வாழ்க்கை நிலை கஷ்டமானது எனக் கவலையுடன் குறிப்பிட்ட அந்தச் சிப்பாய் இது குறித்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ மோட்டார் சைக்கிள் மோதியதில் பொதுமகன் காயம்

முகமாலையில் நேற்று இராணுவ மோட்டார் சைக்கிள் ஒன்றும் சைக்கிள் ஒன்றும் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் சைக்கிளில் வந்தவரான துரைசிங்கம் லிங்கேஸ்வரன் (வயது 38 - அக்கராயன்) காலில் பலத்த காயமடைந்தார்.

அக்கராயனில் இருந்து வியாபார நடவடிக்கைக்காக யாழ் . நோக்கி சைக்கிளில் வந்த மேற்படி நபர் உடனடியாக கொடிகாமம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

(30)

## தேவையற்ற இருப்பு என்பதை படையினர் உணர்ந்துள்ளனர் !

### - விடுவிப்பு வைபவத்தில் இளம்பரிதி -

(நமது நிருபர்)

எம்மிடம் வந்து சரணடைந்த இந்த இராணுவச் சிப்பாய் எம் போராட்டத்தையும் அதன் தாற்பரியத்தையும் உணர்ந்தமையினாலேயே எம்மிடம் வந்துள்ளார். இவ்வாறு ஒவ்வொரு படைச் சிப்பாயும் சிந்தித்தால் தமிழர் தாயகத்தில் தேவையற்று நிலைகொண்டிருப்பதை உணர்ந்து கொள்வர். இவ்வாறு நேற்று மாலை புலிகளிடம் சரணடைந்த இராணுவச்சிப்பாயை விடுவிக்கும் வைபவத்தில் உரையாற்றிய புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி குறிப்பிட்டார்.

தமது இருப்பு இங்கு தேவையற்றது என்று உணர்ந்தமையினாலேயே இந்த சிப்பாய் தமது முகாமிலிருந்து நீண்ட தூரம் பயணித்து எம்மிடம் வந்து சேர்ந்துள்ளார். படையினர் தற்போதைய சூழ்நிலையை உணர்ந்துள்ளனர் என்பதையே இது காட்டுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(56,உ)

## தமிழ் அரசியற் கைதிகளுக்காக பாராளுமன்றில் பாரதூரமான எதிர்ப்பு

### 8ஆம் திகதிக்கு தயாராவதாக சிவாஜிலிங்கம் எம்.பி.

(நமது நிருபர்)

[illegible]ளுத்துறைச் சிறைச்சாலையில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலைக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் - வரும் 8 ஆம் திகதி பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பிக்கும்போது பாரதூரமான எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக - தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்குப் படையினர் கவச வாகனப் பாதுகாப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

வன்னியிலிருந்து கடல் மார்க்கமாக சென்ற 170 விடுதலைப்புலிகள், செங்கலடி - பதுளை வீதியில் சென்ற போது கவச வாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கினர்.

நேற்று மாங்கேணியிலிருந்து செங்கலடி - பதுளை வீதியிலுள்ள தமது முகாமுக்கு 170 புலிகளும் இரு பஸ் வண்டிகள், இரு வான்கள், மூன்று மோட்டார் சைக்கிள்களில் பயணித்தனர். இவர்களுக்கு செங்கலடி கறுத்தப்பாலம் வரையிலும் கவசவாகனங்கள் சகிதம் படையினர் பாதுகாப்பு வழங்கினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

**விண்ணாணம் விநாசியர்**



உவனுகள் சண்டைக்கைதான் ஓடினாங்கள் எண்டு பாத்தா சமாதான காலத்திலையும் ஓடுறாங்கள்!

## தமிழ்த் திறன் தேர்வில் முதலிடங்கள் பெற்றோர்.

உலக ஆசிரியர் நாளையொட்டி தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை நடாத்திய தமிழ் எழுத்துத் திறன் தேர்வில் வட - கிழக்கு மாகாண மட்டத்தில் - சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் பா.மகாலிங்க சிவம் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இரண்டாம் இடத்தை நாணமடு இ.ம.வி.யைச் சேர்ந்த பி.யோகராஜாவும், மூன்றாம் இடத்தை புதுக்குடியிருப்பு ம.வி.யைச் சேர்ந்த கா.சசிதரனும் பெற்றுள்ளனர்.

(வலய மட்ட முடிவுகள் 10ஆம் பக்கத்தில்)

## பெண்கள் எழுச்சி வாரம் இன்று முதல் அனுட்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பெண்கள் எழுச்சி வாரம் இன்று முதல் தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெற்றவுள்ளது.

இவ் எழுச்சிநாள் தமிழர் வாழும் பகுதி எங்கும் வெகு விமரிசையாக கொண்டாடப்படும். இதையொட்டி பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் பெண் போராளிகளின் வீரத் திறமையை வெளிப்படுத்தத் தக்க வகையில் வெஞ்சமரின் வரிகள் எனும் ஒலிப்பதிவு நாடாவும் வெளியிட்டு வைக்கப்படும்.

## தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி

(பன்னாலை)

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 10ம் திகதி தொடக்கம் 12ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாண மட்டப் போட்டியில் வெற்றியீட்டியோர் இதில் பங்குபற்றுவர் எனவும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் இருந்து இம் முறை எட்டு மாணவர் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (72)

## நீச்சல் போட்டியில் உலக சாதனை

ஆண்களுக்கான 200 மீ. பிறஸ்றொக் நீச்சல் போட்டியில் 20 வயதான ஜப்பானிய வீரரான கிற்றா அகிமா புதிய உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

14வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் 200 மீ. பிறஸ்றொக் முறையிலான நீச்சல் போட்டியிலே இவர் 2 நிமிடங்கள் 9.92 செக்கன்களில் நீந்திக் கடந்து முன்னர் நிலைநாட்டப்பட்ட உலக சாதனையை முறியடித்துள்ளார்.

அமெரிக்க நீச்சல் வீரரான மைக் யுறோமன் 1992ஆம் ஆண்டில் பார்சிலோனா ஒலிம்பிக் போட்டியிலே 200மீ. தூர பிறஸ்றொக் நீச்சல் போட்டியில் 2 நிமிட்ங்கள் 10.16 செக்கன்களில் நீந்திக் கடந்து நிலைநாட்டியிருந்த உலக சாதனையையே இவர் முறியடித்துள்ளார்.

## உழவு இயந்திரத்தை மீட்டுத்தருமாறு கோரிக்கை

சாவகச்சேரி கமநல நிலையத்திற்கு சொந்தமான உழவு இயந்திரத்தினை படையினரிடம் இருந்து மீட்டு தரும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது. மேற்படி உழவு இயந்திரம் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் எடுத்துச் செல்லப்பட்டது. விவசாய நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ள இந்த நேரத்தில் மிதிவெடி அச்சம் காரணமாக தனியார் உழவு இயந்திரத்தை சேவையில் ஈடுபடுத்த முடியாது உள்ளது. எனவே இவ உழவு இயந்திரத்தை உடனடியாகப் பெற்றுத் தருமாறு பெரும்பாக உத்தியோகத்தர் சத்தியேந்திரன் பல தரப்பிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கணினி வகுப்பு

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் 6ம்,7ம் வகுப்பு மாணவர்களுக்கான கணினி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. குறைந்த கட்டணத்தில் இவர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது. (58)

## தென்னாபிரிக்க அணி 168 ஓட்டங்களால் வெற்றி

தென்னாபிரிக்காவுக்கும் பங்களாதேஷ அணிக்கும் இடையில் பொட்ஸ்ரோமில் நடைபெற்ற முதலாவது ஒரு நாள் சர்வதேச. கிரிக்கெட் போட்டியில் 168 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 8 விக்கற் இழப்பிற்கு 301 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 41.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது.

தென்னாபிரிக்க அணி வீரர்களான கொக்ஸல் கேய்ஸ் 153 ஓட்டங்களையும், யெக்காவிஸ் 47 ஓட்டங்களையும் வொயிற்றாறிப் பெனா 41 ஓட்டங்களையும் தமது அணிக்குப் பெற்றுக் கொடுத்தனர்.

பங்களாதேஷ் அணி வீரர்களான காலித் மசூத் ஆட்டம் இழக்காமல் 34 ஓட்டங்களையும், காலித் மசூத் மோத் த பாஸ் பைசியா ஆகியோர் தலா 24 ஓட்டங்களையும் தமது அணிக்குப் பெற்றுக் கொடுத்தனர்.

## வலி.வடக்கு பிரதேச சபைக்கு நிதியுதவி கிடைத்தது

(மல்லாகம்)

வடக்கு கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளரால் வலி. வடக்கு பிரதேசசபைக்கு 2002ம் ஆண்டுக்கான நன்கொடை நிதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கும் 41 சனசமூக நிலையங்களுக்கும் ரூபா 40,000மும் மகப்பேற்று நிலையத்தை பராமரிக்க ரூபா 20,000மும் மிகுதி நூலக நன்கொடையாகவும், மலசல கூடங்களைப் புனரமைப்பதற்கும் வழங்கப்பட உள்ளதாக பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (68)

## பஸ்ஸில் தேங்காய் திருடர் நடத்துநரிடம் சிக்கினார்

(மானிப்பாய்)

நேற்று மாலை பொன்னாலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த பஸ்ஸில் தேங்காய் மூடை ஒன்றை திருடமுயன்ற நபர் ஒருவர் பஸ் நடத்துநரிடம் கையும் மெய்யுமாகச் சிக்கினார்.

நேற்று மாலை 6 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கும் ஐந்து சந்திக்கும் இடையில் மேற்படி சம்பவம் நடைபெற்றது.

ஆறுகால் மடத்தடியில் பஸ்ஸில ஏறிய நபரொருவர் ஓட்டுமடத்தடியில் இறங்க முற்பட்டதுடன் பிறிதொரு பயணிக்கு சொந்தமான 500 ரூபா பெறுமதியான தேங்காய் மூட்டையொன்றினையும் அபகரித்துக் கொண்டு இறங்க முற்பட்ட போது இதனை அவதானித்த பஸ் நடத்துநர் அதனைத்தடுத்து நிறுத்தியதுடன் அந் நபரை கடுமையாக எச்சரித்து இடையில் இறக்கி விடட்டார்.

## படித்த மகளிர் குடியேற்றத் திட்டம் மீளக்குடியமர அனுமதி

(மீசாலை)

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்தில் இம் மாதம் 10ம் திகதி முதல் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற படை அதிகாரிகளுடனான சந்திப்பின் போது யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.ரீவிராஜ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இப் பகுதியில் உள்ள 196 வீடுகளில் மட்டுமே மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டது எனவும் மீளக் குடியமர விரும்பும் மக்களை 10ம் திகதி காலை மிருசுவில் சந்தி அல்லது ஜே/336 கிராம அலுவலர் பணிமனையில் கூடுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (25)


வரலாறு

மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை முத்துத்தம்பிப் பிள்ளையின் யாழ்ப்பாண சரித்திரம் ஆகிய நூல்கள் கலாநிதி க.குணராசாவின் மீள் வாசிப்புடன் வெளிவந்துள்ளன. ஸ்ரீ லங்கா, பூபாலசிங்கம் புத்தகசாலைகளில் பெறலாம்.
சி/030

அறிவின் ஊற்றாய் மாணவர் மலர்
சிரேஷ்டருக்காக ...!
தாச்சிமுதல் கிரிக்கெட் வரை
ஊரெழுமுதல் உலகு வரை
விளையாட்டு அரங்கம்
உலகின் எட்டுத் திக்கிலிருந்தும் அதிரடித் தகவல்கள்
சந்தை நிலைவரத்திற்கு தொழில்மலர்
கும்மாளமிடும் உங்கள் வீட்டுச் சுட்டிகளுக்கு சிறுவர் அரங்கம்
நாள்தோறும் பலன் சொல்லும் இன்றைய நாள் இனியநாள்
காதல் முதல் கல்லூரிக்கவிதை வரை மஞ்சுச் சிதறல், பவனை அரங்கம்
குளிர்மைதரும் நிலவின் ஒளியாய் இலக்கியச்சோலை
ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு சிறப்பிதழ் இரண்டு பக்கங்கள் நிறைய
பலதையும் ஆராயும் வி.ஐ.பி. விருந்தினர் பக்கம்
சுடச்சுட உள்நாட்டுச் செய்திகள்
எல்லாவற்றையும் தரும் ஒரேயொரு பத்திரிகை
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நமது ஈழநாடு

YOGI HOME SCIENCE ACADEMY

✲ அடிப்படை ஒப்பனையும் தலை அலங்காரங்களும் ( Basic Make-up & Hair Dressing)
✲ புதிய பயிற்சி வகுப்புக்கள் 16-10-2002 அன்று ஆரம்பமாக உள்ளது. இதில் பாடக்குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்களுடன் முக்கிய வைபவங்களுக்கான ஒப்பனை முறைகள், இந்திய, கண்டியன், குஜராத்தி மற்றும் மடிசார் போன்ற வித்தியாசமான சாறி கட்டும் முறைகள் பயிற்சியளிக்கப்படும். (15 வகுப்புகள் மட்டும்.)
✲ ஏனைய மனையியல் வகுப்புக்களும் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் பெண்களுக்கான ஒப்பனை அலங்காரங்கள் ( Make-up, Hair style Dressing) செய்ய விரும்புவோர் முன்கூட்டி தொடர்பு கொள்ளவும்.




75, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
(சி-035)

எரிக் கணேஷ்

⇨ இலவசமாக கண்களை பரிசோதித்து தரம் மிக்க கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
⇨ சீன முறையில் பயிற்சிபெற்ற நிபுணர்களினால் உறுதி மிக்க பற்களைக் கட்டிக் கொள்ளவும்
⇨ மிதப்புப் பற்களுக்கு கிளிப்போட்டு 3 மாத காலத்தில் சீரமைத்துக் கொள்ளவும்.

நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
எரிக் கணேஷ்
மூக்குக் கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்
564, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்
கிளைகள் :- 80, K.K.S.Road சுன்னாகம். 91, K.K.S.Road கொக்குவில் (சி-034)

## 2 ஆம் சுற்று தாய்லாந்துப் பேச்சுக்களின்போது

# அரச தரப்புக் குழுவில் ஜனாதிபதியின் பிரதிநிதி

(கொழும்பு நிருபர்)

தாய்லாந்தில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களில் ஜனாதிபதியின் சார்பில் பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கு இணக்கம் காணப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின்போதே இந்த இணக்கம் காணப்பட்டிருக்கின்றது.

தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கும் நோக்கிலேயே கதிர்காமருடனான இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச்சந்திப்பில் அமைச்சர் மிலிந்த மொறகொட, தாய்லாந்துப் பேச்சு வார்த்தைகள் மற்றும் அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் குறித்து கதிர்காமருக்கு விளக்கமளித்திருந்தார்.

ஆனால் தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதியின் சார்பில் அமைச்சர் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியை அமைச்சர் மிலிந்த மொறகொட சந்தித்துப்பேச விரைவில் ஏற்பாடு செய்து தருவதாகவும் லக்ஷ்மன் கதிர்காமர் உறுதியளித்துள்ளார்

## விசர்நாய் கடித்து குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

விசர் நாய் கடிக்குட்பட்ட இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் மரணமடைந்துள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த ந.உதயகுமார் (வயது38) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். மிக அண்மையிலேயே இவர் திருமணம் செய்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (40-71)

## திருத்தப்படாத வீதி

(மண்கும்பான்)

வலம்புரி ராணுவ நடவடிக்கையின்போது பலத்த சேதத்திற்கு உள்ளாகிய மண்கும்பான் - அல்லைப்பிட்டி உள்வீதி இதுவரையில் திருத்தப்படாமல் உள்ளது.

குன்றும் குழியுமாக இருக்கும் இவ்வீதியால் பயணம் செய்யும் பொதுமக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (53)

### காணாமற்போனதாகக் கருதப்படுவோர்

## மரணப் பதிவை செய்யும் கால எல்லையை நீடிக்குக

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனவர்களை மரணமடைந்துவிட்டதாகக் கருதி மரணப் பதிவு செய்வதற்கான கால எல்லையை நீடிக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகைதந்த தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவிடமே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட அரசின் சுற்றுநிருபத்தின்படி கடந்த வருட இறுதியுடன் இவ்வாறு மரணப்பதிவு செய்வதற்கான காலஎல்லை முடிவடைந்துவிட்டது.

இதனால் பலர் பாதிப்படையும் நிலையைத் தவிர்க்கும்முகமாகவே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

## ஏழு ஊடகங்களுக்கு எதிராக பிரதமர் ரணில் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள ஏழு ஊடக நிறுவனங்களுக்கு எதிராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளார்.

தனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும்வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் உரையை ஒலிபரப்புச் செய்தமைக்காகவே அவர் சட்டநடவடிக்கை மேற்கொள்ளவுள்ளார்.

றோயல் கல்லூரியில் தனது பிள்ளையைச் சேர்ப்பதற்கென தரகர் ஒருவர் ஊடாக அந்தக் காலப்பகுதியில் கல்வி அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்காவுக்கு லஞ்சம் வழங்கக்கோரியதாக ஜனாதிபதி ஆற்றிய உரையையே இவ் ஊடகங்கள் ஒலிபரப்பு செய்திருந்தன.

பிரதம மந்திரியின் சார்பில் சட்ட நிறுவனமான சமரரட்ண கொம்பனி இந்த நடவடிக்கை தொடர்பாக சகல ஊடக நிறுவனங்களுக்கும் அறிவித்தல் விடுத்துள்ளது.

## புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாக தமிழக பொலிஸாரால் மருத்துவர் கைது!

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியமைக்காக மருத்துவர் தாயப்பன் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் மருத்துவர் தாயப்பன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியிருந்தார்.

புலிகளுக்கு ஆதரவு தெரிவித்துப் பேசிய குற்றச்சாட்டின்பேரிலேயே இவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுக்காலை தாயப்பனின் வீட்டினுள் புகுந்து தமிழகப் பொலிஸார் விரிவான சோதனைகளை நடத்தியிருந்தனர்.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மேலும் பதின்மூன்று பேர் தமிழகத்தில் பல்வேறு சிறைச்சாலைகளிலும் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

## தனியார் மயமாதலை எதிர்த்துப் போராட்டம்

(கொழும்பு)

அரசாங்க நிறுவனங்களை தனியார் மயமாக்குவதை எதிர்த்து - பொதுசன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி.யும் இணைந்து போராட்டமொன்றை எதிர்வரும் 8ஆம் திகதி நடாத்தவுள்ளன.

கொழும்பு மின்சார சபை தலைமையகம் முன்பாக நடைபெறவுள்ள இப்போராட்டத்தை தொடர்ந்து- கோட்டை இரயில்வே நிலையம் வரை பேரணியொன்றை நடாத்தப்படவுள்ளது.

இப்போராட்டத்தில் தனியார் மயமாக்கலை எதிர்க்கும் சில ஐ.தே.க.சார்பு தொழிற்சங்கங்களும் கலந்துகொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### வன்செயலால் மரணமடைந்தவர்களுக்கான

## நட்டஈட்டுக் கொடுப்பனவு அதிகரிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வன்செயல் காரணமாக மரணமடைந்தவர்களிற்கான நட்டஈட்டுக் கொடுப்பனவை அதிகரிக்கும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த மனித உரிமைகளுக்கான பாராளுமன்றத் தெரிக்குழுவினரிடமே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போது வன்செயல் காரணமாக மரணமடைந்தவர்களுக்கு அதிக பட்சமாக ஐம்பதாயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. தற்போதய நிலையில் மேற்படி கொடுப்பனவு போதுமானதாக இல்லையென்று பலதரப்பினரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (க)

## போதியளவு மழை பெய்யாவிட்டால் நீர்மின் உற்பத்தி பாதிக்கப்படும்!

## அதிகாரிகள் அச்சம்

(கொழும்பு)

போதியளவு மழை உடனடியாகப் பெய்யாதுவிட்டால் மின் உற்பத்தி வீழ்ச்சி அடையும் என்று மின்சக்தி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலங்களில் போதியளவு மழை பெய்யாததன் காரணத்தினால் நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு குறைந்து வருகிறது. இதனால் மின்சக்தி உற்பத்தி பாதிக்கப்படும் நிலை உருவாகியிருக்கின்றது.

இந்நிலை ஏற்பட்டால் மீண்டும் மின்வெட்டை அமுல்படுத்த வேண்டியநிலை உருவாகலாம் என அதிகாரிகள் அச்சம் வெளியிட்டனர். இவ்வருட ஆரம்பத்தில் நீர்மின் உற்பத்தி பெரிதும் வீழ்ச்சி கண்டதால் ஆகக்கூடியது எட்டு மணிநேர மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## திருடியவர் அகப்பட்டார்

பண்டத்தரிப்புச் சந்திக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் திங்களன்று இரவு 11.00 மணியளவில் வீட்டில் யாருமற்ற வேளையின்போது சில தளபாடங்கள் திருடப்பட்டுள்ளன. திருடிய நபர் அன்றிரவே அயலவர்களால் பிடிக்கப்பட்டு வடலியடைப்பில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டு விசாரணையின்பின் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். (44)

## சங்கத் திறப்புவிழா



பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடுவகப் பணிமனை திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்ட - விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் நினைவுச் சுவட்டைத் திரைநீக்கம் செய்துவைப்பதையும், அருகில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் விஜிதரன், சங்கத்தின் உபதலைவர் ஆ.அருணாசலம், சங்கத் தலைவர் ந.சிவஞானம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். *(வடமராட்சி நிருபர்)*

## கரந்தன் பகுதிக்கு இன்னமும் மின் இல்லை

(உரும்பிராய்)

உரும்பிராய்க்கும் நீர்வேலிக்கும் இடையில் அமைந்துள்ள கரந்தன் கிராமத்திற்கு இன்னமும் மின் விநியோகம் வழங்கப்படவில்லை.

தமது பகுதிக்கு மின் இணைப்பு வழங்குமாறு இப்பகுதி மக்கள் மின்சார சபை அதிகாரிகளிடம் பலமுறை கோரியிருந்தனர். இதுவரை மின்னிணைப்பு வழங்கப்படாமல் இருப்பதால் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கரந்தன் பகுதிக்கு ஊடாகவே நீர்வேலிப் பகுதிக்கு உயர்வலு மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாகவும் இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். (84)

## சுண்டுக்குளியில் புனரமைக்கப்படும் குளம்

(பாண்டியன்தாழ்வு)

சுண்டுக்குளி சனசமூக நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள குளம் அப்பகுதி சனசமூக நிலைய உறுப்பினர்களால் ஆழமாக்கப்பட்டு வருகிறது. அதிலிருந்து பெறப்படும் மண் சனசமூக நிலையத்தின் முன்புறத்தில் நிரப்பப்பட்டு மட்டப்படுத்தும் நடவடிக்கை இரவுபகலாக இடம்பெற்று வருகின்றது. மழைகாலத்தில் குளம் நிரம்பி அயலில் உள்ள வீடுகளிற்குள் வெள்ளம் உட்புகுவதைத் தடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன் நடவடிக்கை இதுவாகும்.

## மட்டு. காற்பந்தாட்ட அணி 10ஆம் திகதி யாழ். வருகிறது

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டக் கழகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்களைக் கொண்ட காற்பந்தாட்ட அணி யாழ். வரவுள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த 32 காற்பந்தாட்டக் கழகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்களைக் கொண்ட அணியே யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளது.

இவ்அணி எதிர்வரும் 10ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட அணியுடன் காற்பந்தாட்டப்போட்டியில் பங்குபற்றும் எனத் தெரியவருகின்றது.

## வடமராட்சியில் அடிக்கடி மின்தடை; அலுவலகப் பணிகள் பாதிப்பு!

### அரச அதிகாரிகள் விசனம்

(வடமராட்சி)

வடமராட்சி பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளிலும் இருபத்திநான்கு மணிநேரமும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளபோதும் திடீர் திடீரென மின்தடை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனரேற்றர்கள்மூலம் யாழ். குடாநாட்டிற்கு இலங்கை மின்சார சபையினால் விநியோகிக்கப்பட்டு வரும் மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதால் மின்சாரத்தினை நம்பி, வேலைகளை செய்யமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு, பகல் வேறுபாடுகளின்றி மின்தடை ஏற்படுவதால் மின்சாரத்தை நம்பி இயங்கிவரும் அரச திணைக்களங்கள் இயங்க முடியாதநிலை ஏற்படுகின்றது. இதனால் தனியாரிடம் ஜெனரேற்றர் தேடி அலையவேண்டியுள்ளதாக திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவத்தார்.

வேலைகளை இலகுபடுத்தும் நோக்குடன் கணினிகளை பயன்படுதுபவர்கள் இதனால் நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(23)

# உலகவலம்

# 4 விமானந்தாங்கிக் கப்பல்கள் ஈராக்கை தாக்கும் நிலைகளில்!

(வொஷிங்டன்)

**டிசம்பர் மாத இறுதியளவில் ஈராக்மீது முழு அளவிலான தாக்குதல் நடத்தும் நிலையில் அமெரிக்கா இருக்கும் என அமெரிக்க கடற்படை அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.**

தாக்குதலுக்கு தயாராக நான்கு விமானந்தாங்கிக் கப்பல்கள் ஈராக்கைத் தாக்கக்கூடிய தூரத்தில் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் எனவும் இதில் ஏற்கனவே இரண்டு விமானத் தாங்கிக் கப்பல்கள் குறிப்பிட்ட இடத்தில் நிலைநிறுத்தப்பட்டிருப்பதையும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஜோர்ஜ் வொஷிங்டன், லிங்கோன் ஆகிய அமெரிக்க விமானம் தாங்கிக்கப்பல்களே நிலைநிறுத்தப்பட்டிருப்பன ஆகும்.

தற்போது மேலும் இரண்டு விமானந்தாங்கிக் கப்பல்கள் குறிப்பிட்ட இடத்தை நோக்கி விரைந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நான்கு கப்பல்களிலும் குறிப்பிட்ட ஒரு இலக்கை சரியாகத் தாக்கக்கூடிய இருநூற்றி ஐம்பது விமானங்கள் உள்ளன எனவும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட குறூஸ் ஏவுகணைகள் ஏவுவதற்கு தயார் நிலையில் உள்ளன எனவும் தெரிய வருகின்றது.



ஈராக்கில் நீக்கமற எங்கும் நிறைந்த இரும்புமனிதர் சதாம்

# ஈராக் மீது அமெரிக்க விமானங்கள் துண்டுப்பிரசுரங்கள் மூலம் எச்சரிக்கை!

(பாக்தாத்)

ஈராக்கிய விமானங்கள் பறப்பதற்கு தடைசெய்யப்பட்ட வான்வெளிப் பிரதேசத்திலிருந்து (No - fly zone) ஈராக்கியப் படைநிலைகள்மீது குண்டுகளையும் பிரசுரங்களையும் அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் வீசியுள்ளன.

பாக்தாக்கிலிருந்து தென்கிழக்கே இருநூற்றியறுபது கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ராலில் (Tallil) பிரதேசத்திற்கருகிலுள்ள விமானப் படை நிலைமீதும் படைத் தொடர்பாடல் நிலைமீதும் அமெரிக்க விமானங்கள் தாக்கியதாக அமெரிகக மத்திய கட்டளைப் பீடம் அறிவித்துள்ளது.

ஈராக்கிய விமான எதிர்ப்பு பிரிவினர் தங்கள் விமானங்களின் மீது எறிகணை மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியதற்குப் பதிலடியாக தாம் குண்டுவீசியதாக அமெரிக்கா தெரிவித்தது.

வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்களின் மூலம் தங்கள் விமானங்களின்மீது தாக்குதல் நடத்தினால் ஈராக்கியத் துருப்புக்கள் இலக்காக்கப்படும் என்ற எச்சரிக்கை அமெரிக்காவால் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் துண்டுப் பிரசுரங்கள் ஈராக்கின் தெற்குப் பகுதிகளில் வீசப்பட்டுள்ளது. இத்துண்டுப்பிரசுரங்களின் மாதிரிகள் செய்தியாளர்களுக்கும் வழங்கப்பட்டது.



ஈராக் மீது தாக்குதல் நடத்தப் பயன்படும் ஜெற் விமானம்

## குண்டுகளோடு

## ஒருலட்சத்து இருபதினாயிரம் துண்டுப்பிரசுரங்கள் ஈராக்மீது அமெரிக்காவால் வீசப்பட்டன!

## ஐந்து பொதுமக்கள் பலியாகினர்



(பாக்தாத்)

அமெரிக்க இராணுவத தலைமையகம், ஒருலட்சத்து இருபதினாயிரம் துண்டுப் பிரசுரங்களை ஈராக்மீது வீசியதாகத் தெரிவித்தது.

அத்துண்டுப் பிரசுரத்தில் ஈராக்கின் விமான எதிர்ப்புத் தளத்தின் மீது அமெரிக்க விமானம் குண்டு வீசும் கோட்டுவரைபடமும் பொறிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விமானத் தாக்குதலில் ஐந்து ஈராக்கியப் பொது மக்கள் கொல்லப்பட்டதாக ஈராக்கிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

# ஐவரிகோஸ்ட்டில் யுத்த நிறுத்தம்!

(லண்டன்)

ஐவரிகோஸ்ற் நாட்டில் கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தீவிரவாதிகளுக்கும் ஆளும் அரசாங்கத்துக்கும் இடையில் யுத்த நிறுத்தம் செய்வதற்கான முயற்சிகளில் மத்தியஸ்தர்கள் வெற்றி அடைந்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து தீவிரவாதிகளுக்கும் ஆளும் அரசாங்கத்துக்குமிடையில் உடனடியாக யுத்தநிறுத்தம் கைச்சாத்தாகவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.



ஐ.நாவின் பொருளாதாரத் தடை காரணமாக ஈராக்கில் குழந்தைகள் இறப்பு வீதம் இருமடங்காகியுள்ளது. இந்த ஈராக்கியத் தாய் பொருளாதாரத் தடைக்கெதிராக உரக்கக் குரல் கொடுக்கிறார்.

# மாணவிகளின் புத்தகங்கள் ஆப்கானில் எரிக்கப்பட்டன

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பாடசாலை செல்லுகின்ற நூற்றைம்பது மாணவிகளின் புத்தகங்கள் எழுதுகருவிகள் என்பன மதக்குழுவைச் சேர்ந்தவர்களால் எரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பாடசாலைக்கு பெண்கள் செல்லக்கூடாது என்றும் அவர்கள் எச்சரித்தனர்.

இது தொடர்பாக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கும் தலிபான்களுக்கும் தொடர்பு இருப்பதாக மேற்கத்தைய செய்தி ஸ்தாபனங்கள் கூறுவதில் எவ்வளவு தூரம் உண்மையிருக்கிறது என்பதை உறுதிப்படுத்தமுடியாது என அங்குளள சர்வதேசத் தொண்டர் அமைப்பின் பெண் அதிகாரி தெரிவித்தார்.

ஆப்கான் பெண்களின் பாடசாலைக் கல்வி வளர்ச்சிக்காக யுனிசெவ் நிறுவனம் உதவிவருகிறது.

# ஐ.நா. பரிசோதனைக்குழு முடிவை மாற்றுகின்றது!

(வோஷிங்ரன்)

ஐ.நா. சபையின் ஆயுதப் பரிசோதகர்குழு ஈராக்குக்கு உடனே செல்வது சாத்தியமல்ல என்று அக்குழுவின் தலைவர் அறிவித்துள்ளார். வேறு சில நடைமுறையான சிக்கல்களுக்கு தீர்வு காணப்பட வேண்டியுள்ளது என்றும் அவர் கூறினார்.

முதலில் ஈராக் தூதுக்குழுவும் ஆயுதப்பரிசோதகர் குழுவும் நடத்திய பேச்சுக்களில் உடன்பாடு காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டதாயினும், புதிய கடுமையான தீர்மானம் ஒன்றை பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றினால் மட்டுமே ஆயுதப் பரிசோதகர் குழு ஈராக்குக்குள் செல்லமுடியும் என்று அமெரிக்கா அழுத்தம் கொடுத்தது. இவ்விடயத்தை ஐ.நா.சபை ஆராய்ந்து கொண்டுள்ளது.

இதனையடுத்து தன்னுடைய முன்னைய நிலைப்பாடுகளிலிருந்து ஆயுதப் பரிசோதகர்கள் பின்வாங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# பலிக்குமா அமெரிக்காவின் தொலைபேசி இராஜதந்திரம்?

(மொஸ்கோ)

பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளின் இராஜதந்திரிகளுடன் நேரடிச் சந்திப்புக்கள் மூலம் சாதிக்கமுடியாமற்போன ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஈராக் தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றும் விடயத்தை, தொலைபேசி மூலம் சாதிக்க அமெரிக்க அதிகாரிகள் முயன்று வருகின்றனர்.

'தொலைபேசி இராஜதந்திரம்' (telephone diplomacy) என்று அழைக்கப்படும் இந்த முயற்சியின் மூலம் பாரிஸ், மொஸ்கோ நகரங்கள் மசிந்து கொடுக்குமா என்பதையிட்டு பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என ரஷ்யாவிலுள்ள மேற்கத்திய செய்தியாளர் தெரிவித்தார்.

## ஜெருசலேம் நகரம் யூதர்களுக்கா?

ஜெருசலேம் இஸ்ரேலினுடைய தலைநகரம் என்ற பிரகடன வாசகத்தை அமெரிக்கா ஏற்றுக்கொண்டதை முஸ்லிம் உலகம் கடுமையாக எதிர்க்க வேண்டுமென பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் கேட்டுள்ளார்.

நீண்ட வரலாற்றுச் சர்ச்சை கொண்ட ஜெருசலேம் நகரம் தொடர்பான அமெரிக்காவினுடைய இந்த நிலைப்பாட்டினால் , அமெரிக்காவுக்கெதிரான முஸ்லிம்களின் நிலைப்பாட்டில் மேலும் தீவிர நிலைமை தோன்றும்.

இது ஈராக் தொடர்பான பிரச்சினையில் முஸ்லிம்களின் ஆதரவைத் திரட்டுவதில் பின்னடைவை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## மத சுதந்திரத்திற்கான அமெரிக்க அமைப்பு

(கராச்சி)

அமெரிக்காவில் இயங்கிவரும் சர்வதேச மதச் சுதந்திரத்திற்கான அமைப்பு, மத உரிமைகள் மீறப்படும் நாடுகளின் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளும் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

## பாகிஸ்தான் ஏவுகணை பரிசோதனை!

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் தரையிலிருந்து தரைக்கு ஏவப்படும் ஏவுகணை ஒன்றை வெற்றிகரமாகப் பரீட்சித்தது.

ஷாகீன் (Shaheen) என்ற பெயருடைய இந்த ஏவுகணை மரபுவழி ஆயுதங்களையும், அணு ஆயுதங்களையும் தாங்கிச் செல்லவல்லது. இந்த ஏவுகணை எழுநூற்றைம்பது கிலோமீற்றர்கள் வீச்சுக் கொண்டது.

இந்த ஏவுகணைப் பரீட்சிப்பு தொடர்பாக இந்தியா எச்சரிக்கை விடுத்துள்ளது.



பாகிஸ்தானால் பரீட்சிக்கப்பட்ட ஷாகீன்

## வார்த்தை விளையாட்டு - 1




முழுப் பெயர் : ..............................

கற்கும் பாடசாலை : ..............................

கற்கும் தரம் : ..............................

முகவரி : ..............................

.............................. ..............................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. 1330 குறும்பாக்களைக் கொண்ட தமிழ் நூல்.
3. சமையலுக்குப் பயன்படுத்தப்படுவது.
4. மேலிருந்து பாய்தலை இப்படியும் சொல்லாம்.
5. தழும்பு ~ இடம்மாறி இருக்கிறது.
6. ஒரு தானியம்.
7. பார்வைக்கு உதவும் உறுப்பு.
8. இதன் அடிப்படையிலேயே வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும்.

### மேலிருந்து கீழ்

2. காட்டில் நாடோடிகளாக வாழும் மக்கள்.
3. உண்ணும்போது ஏற்படுவது.
4. மனித இனத்தின் மூதாதையர் எனச் சொல்லப்படுவது (ஒரு விலங்கு)
5. ரீங்காரம் இடும் ஒரு உயிரினம்.
7. வேகம் இப்படியும் அழைக்கப்படும். (கீழிருந்து மேலாக)

☞ சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15வயதுக்கு குட்பட்ட எவரும் பங்கு பற்றலாம்.

☞ மேல்காணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில

நமது ஈழநாடு
சிறுவர் அரங்கம்
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள்:-12-10-2002

சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்

## உயிரியல் விந்தைகள்


நுளம்பு தன் இறக்கைகளை இடைவிடாது மேலும் கீழும் அசைப்பதாலேயே சத்தத்தை உண்டாக்குகிறது.

முதலை மட்டும்தான் தன் மேல்வாயை அசைக்கக் கூடியது.



வீட்டுப் பிராணிகளில் வான்கோழியே (Turkey) மிகப் பாரம் கூடிய பறவையாகும். இது ஏறக்குறைய 40 கிலோகிராம் நிறையுடையது.

கோழிக்குஞ்சுகள் கேட்கும் திறனுடையவை. முட்டையிலிருந்து வெளிவருமுன்பே கீச்சிடக் கூடியவை.



எந்தவொரு வரிக்குதிரையின் வரிகளும் அவற்றவற்றுக்கென்றே தனித்துவமானது.

நாய் தன் உடலைக் குளிர்விப்பதற்காக நாக்கைத் தொங்கவிடுகிறது. உமிழ்நீர் வடிந்து அகற்றப்படுவதால் உடல்வெப்பம் அகற்றப்படுகின்றது.



குரங்குகள் கோபம்வரும்போது தன் முழுப் பற்களையும் வெளிக் காட்டும்.

ஒரு பூனையின் மீசை மயிர்களின் இருபுற நீளம் அதன் உடலின் அகலத்திற்குச் சமனானது.


## கெட்டிக்கார நாய்க்குட்டி

இது எங்கள் வீட்டு நாய்க்குட்டி, அழகான நாய்க்குட்டி துள்ளி ஓடும். எங்களுடன் சேர்ந்து பந்து விளையாடும். எங்களுடன் சேர்ந்து சாப்பிடும்.



நான் பாடுவேன் - அது கேட்டுக் கொண்டிருக்கும். நான் ஆடுவேன் அது பார்த்துக் கொண்டிருக்கும்.

ஒருநாள் அந்த நாய்க்குட்டி தெருவுக்குப் போனது. தெருவில் ஒரு பழந்துணி இருந்தது. நாய்க்குட்டி அதைப் பார்த்தது அதைத் தனது வாயாற் கௌவியது. அதை வீட்டுக்கு கொண்டு வந்துவிட்டது.

“இதை எங்கே எடுத்தாய்?” என்று அம்மா கேட்டார். நாய்க்குட்டி தெருவைக் காட்டியது. அம்மாவுக்குக் கோபம் வந்தது. “தெருவில் உள்ள பொருள்களைத் தொடக்கூடாது” என்று அம்மா பேசினார். அதைக் கொண்டு போய்த் தெருவில் போடச் சொன்னார்.

நாய்க்குட்டி துணியைத் தூக்கியது. தெருவுக்குப் போனது, எடுத்த இடத்தில் அதைப் போட்டது. வீட்டுக்கு ஓடிவந்தது. வாலை ஆட்டியது. “கெட்டிக்காரக் குட்டி” என்றார் அம்மா.

அடுத்தநாள் நாங்கள் கோவிலுக்குப் போனோம். தெருவில் ஒரு பட்டுத்துணி கிடந்தது. நாய்க்குட்டி அதைப்பார்த்தது. அம்மா சொன்னதை நினைத்தது. அதை எடுக்கவில்லை. அது கெட்டிக்கார நாய்க் குட்டி.

பேராசிரியர் சபா. ஜெயராஜா



## சிறுவர் அரங்கம்



# இளந் தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந் தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந் தேனீக்கள் கழகம்**<br>
சிறுவர் அரங்கம்<br>
நமது ஈழநாடு<br>
267,நாவலர் வீதி,<br>
யாழ்ப்பாணம்.

## இளந் தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..........................................

கற்கும் பாடசாலை :..........................................

கற்கும் தரம் :..........................................

வீட்டு முகவரி :..........................................

பிறந்த திகதி :..........................................

ஆர்வமுள்ள துறைகள் :..........................................

:..........................................

.................. ..............................

திகதி ஒப்பம்

.............................. ..............................

அதிபர் ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## அறிவியல் தகவல்கள்

பொதுவாக நாம் பயன்படுத்தும் மின்கலங்கள் *(Batteries)* உயர்ந்த வெப்பநிலையில் பழுதடைந்து விடுகின்றன. ஆகவே இவற்றைச் சூரிய ஒளி நேரடியாகப் படாதபடி குளிர்ச்சியான இடத்தில் வைத்திருக்க வேண்டும். பயன்படுத்தாத நேரங்களில் அவற்றைக் கழற்றி வைப்பதும் நல்லது.

உலகம் முழுவதும் எல்லா இடத்திலும் எந்தவித தட்பவெப்ப நிலையிலும் வளரும் ஒரே உயிரினம் எது தெரியுமா? எங்கள் வீட்டைக் காக்கும் நாயேதான்!!

ராடரின் *(Rader)* கண்காணிப்பில் சிக்காத நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை அமெரிக்கக் கப்பற்படை பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. போர்க்கருவிகளை இரகசியமாகக் கொண்டு செல்லப் பயன்படும் இந்நீர் மூழ்கியின் பெயர் "கருநிழல்" *(Black Shadow)*

ஹெகுலே *(Kekule)* என்ற இரசாயன விஞ்ஞானி தனது கனவின் அடிப்படையில்தான் பென்சிலின் சேர்வையின் கட்டமைப்பைக் கண்டு பிடித்தார். இக்கனவில் ஒரு பாம்பு பின்புறமாக வாலை வளைத்து அதனைத் தன் வாயால் கடிப்பதைக் கண்டாராம். உங்கள் கனவுகளை நினைவுபடுத்திப் பாருங்கள். சில்வேளை புரியாதவற்றுக்கும் புதிர் கிடைக்கக் கூடும்.

ஒருவருடைய கைரேகை ஒரு போதும் மற்றவருடையதை ஒத்திருப்பதில்லை. ஆனால் அரிதாக ஒத்துப்போவதும் உண்டு. சுமார் இரண்டரைக் கோடியில் ஒரு உதாரணம் இந்த மாதிரி ஒத்துப் போகலாம்.

பச்சோந்தியினால் தனது இரண்டு கண்களையும் நேர் எதிரான திசையில் திருப்ப முடிவதுடன் கண்களை எந்தப் பக்கம் வேண்டுமானாலும் சுழலச் செய்யவும் முடியும். கண்கள் குருடாகிப் போனால் இவை நிறம் மாறும் தன்மையையும் இழந்துவிடுகின்றன.




கணினியானது இன்று எல்லோர் வாழ்விலும் பின்னிப்பிணைந்து தவிர்க்க முடியாத சாதனமாகி விட்டது. ஆதலால் இத் தொழில்நுட்ப உலகில் வாழ யாவருக்கும் கணினி பற்றிய அறிவு அவசியம் ஆகின்றது.

**Personal Computer** என்பதன் சுருக்கமே **PC**, தனிப்பட்டவரின் பாவனைக்காக உற்பத்தி செய்யப்பட்ட சிறிய வடிவினைக் கொண்ட இதனை **Micro Computer** என்றும் அழைப்பர். ஆரம்ப காலங்களில் **IBM** நிறுவனமும், **Apple** நிறுவனமுமே இத்தகைய கணினிகளைத் தயாரித்தன. இதில் **IBM** நிறுவனமே முதன்முதலில் **'PC'** என்ற சொல்லை அறிமுகப்படுத்தியது. **Apple** நிறுவனம் தனது கணினிகளுக்கு **Macin tosh** எனப் பெயரிட்டது. இந்த இரு நிறுவனங்களின் பெயாட்டு வழக்கு இன்று **Computer** பாரம்பரியமாக மாறி **'PC'**, **'Mac'** எனும் இரு பெரும பிரிவுகளாக **Personal Computer** களை வகைப்படுத்துகிறது.



**IBM Company** இன் தொழில் நுட்பங்களும் வியாபார யுக்திகளும் **Computer** உலகில் மிக மேலோங்கியதால் இதனைத்தொடர்ந்து **Personal Computer** உற்பத்தியில் இறங்கிய அனேகமான நிறுவனங்களும், மற்றும் **Computer** உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களும் **IBM Company**யின் தொழில் நுட்பங்களையே பின்பற்றியதுடன் அவற்றை **IBM Compatible** என்றும் **IBM Clore** என்றும் அழைத்தனர். தற்போது இந்த வழக்கமானது சற்று மாறி எல்லா சொந்தத் தேவைக்களுக்காகவும் பயன்படுத்தப்படும் கணினிகளையும் **PC** என்றழைக்கும் முறை நிலைத்துவிட்டது. இதற்கு கம்யூட்டர் தொழில் நுட்பத்தில் **IBM Apple** நிறுவனங்கள் மட்டுமல்லாது **Micro soft, Intel, AMD, Motorola** போன்ற நிறுவனங்களும் முன்னேறக் காரணமாகும்.

*கணினித் தொகுதி - Computer System*

ஒரு குறிப்பிட்ட தொழிற்பாட்டைச் செய்வதற்காக தேவையான பாகங்களை ஒருங்கிணைத்து இயக்குவதை ஒரு **System** என்றழைப்பர். **Computer System** என்பது கணினியின் உதிரிப்பாகங்களையும், கணினிச் சாதனங்களையும் ஒருங்கிணைத்து இயக்குவதைக் குறிக்கும். ஒரு அடிப்படைக் **Computer System** ஆனது ஒரு **System Unit (CPU)** ஒரு **tim** ஒரு **Key-board**, ஒரு **Mouse** போன்ற சாதனங்களை ஒன்றாக இணைத்து இயக்குவதைக் குறிக்கிறது. இவற்றுடன் மேலதிகமாக வேறு பல பாகங்களையும் பல்தேவைகளை நிறைவேற்றுவதற்காக இணைத்துக் கொள்ளலாம்.



உதாரணம்:- பிரிண்டர், ஸ்கானர், ஸ்பீக்கர், மோடம் போன்றவை.

ஒரு கொம்பியூட்டர் சிஸ்ரத்தை இரு பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

1. மென்பொருட்கள்- **Software**
2. வன்பொருட்கள் - **Hardware**

மென்பொருள் என்பது கணினிக்குக் கொடுக்கப்படும் கட்டளைகளின் தொகுப்பாகும்.

**- சேரலாதன் -**

## ஆங்கிலம் பழகுவோம் !

**Dear Children,**

**We are glad to inform you that we are going to allocate a corner for your creations. We kindly request you to send your articles.**

**Good Luck!**

அன்புக்கினிய சிறுவர்களே!

சிறுவர் அரங்கம் உங்களுக்காகவே வெளிவருகிறது.

இதில் உங்கள் ஆக்கங்களும் இடம்பெறவேண்டும் அல்லவா?

கதைகள், கட்டுரைகள், கவிதைகள் மற்றும் துணுக்குத் தகவல்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். எமது முகவரி.



**நமது ஈழநாடு**<br>
சிறுவர் அரங்கம்<br>
267, நாவலர் வீதி,<br>
யாழ்ப்பாணம்.



## கண்டுபிடித்து வர்ணம் தீட்டுங்கள் !

மேலுள்ள படத்தில் ஒரு உருவம் மறைந்துள்ளது. அந்த உருவம் என்னவென்று கண்டுபிடித்து வர்ணம் தீட்டுங்கள் பார்க்கலாம்.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*பல விடயங்களையும் சுருக்கமான வழியில் செய்வதற்கு ஒரே வழி, அச் செயல்களை தகுந்த சமயத்தில் செய்வது தான்*

*-சிசில்*

# நமது நோக்கு

## தெளிவான செயற்றிட்டம் வேண்டும்!

நிரந்தர சமாதானத்துக்கான முயற்சிகளில் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்பினரும் தீவிரமாக இறங்கியுள்ள இவ்வேளையில் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்து பல வருடங்களாக அகதி வாழ்க்கை வாழ்ந்துவரும் மக்களின் பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகிறது.

இந்தவகையில் - வலிகாமம் வடக்குப் பகுதியில் இருந்து இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து வாழும் மக்களின் அவலநிலையைத் தீர்த்து வைப்பதற்கு அனைவருமே ஒன்றுதிரள வேண்டிய நேரம் வந்துள்ளது.

மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு என்பவற்றுக்கான முன்னேற்பாடுகள் ஆரம்பமாகவுள்ள இன்றைய நிலையில்- வலி.வடக்கு மக்களின் பிரச்சினைக்கான முழுமையான, உடனடித்தீர்வு ஒன்று காணப்படுவது அத்தியாவசியமாகிறது.

வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்தை வார்த்தைகளாக - உறுதிமொழிகளாகப் பெற்றுக் கொள்வது இனியும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

ஏனெனில் - இன்றளவும் வலி.வடக்குப் பற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குறுதிகளில் நடைமுறைக்கு வந்தவை மிகச் சொற்பமானதே.

வெறுமனே - மக்களிடையே 'பரபரப்பு' கிளப்பும் மாநாடுகளாலும், கலந்துரையாடல்களாலும், பிரமுகர்கள் சந்திப்பினாலும், பிரதேசங்களைப் பார்வையிட்டுத் திரும்புவதாலும் இதுவரை பெரிதாக எதையும் எவரும் சாதித்துவிடவில்லை.

மக்களிடையே எதிர்பார்ப்புக்களைத் தூண்டிவிடும் விஜயங்களையும், அறிக்கைகளையும் மக்கள் சலிப்புடனேயே இன்று நோக்குகின்றனர்.

எனவே, இனிமேல் வலிகாமம் வடக்கில் மீளக் குடியமர்வு பற்றியும், அதற்கான அணுகுமுறைகள் பற்றியும் தெளிவான, விரிவான, தொடர்ச்சியான செயற்திட்டம் ஒன்று உருவாக்கப்படுவது அவசியமாகும்.

இத்தகைய செயற்திட்டத்தை வெகுஜன அமைப்புக்களும், அரசியல்வாதிகளும், பொது மக்களும் இணைந்து உருவாக்கி - அதனடிப்படையில் மீளக் குடியமர்வை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளில் இறங்குவதே பயன்தரக்கூடியதாக அமையும்.

வடக்கின் பெரும் துறைமுகமும், ஒரேயொரு விமானத்தளமும், யாழ்ப்பாணத்திலேயே அதிகளவு தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிய சீமெந்து உற்பத்தி நிறுவனங்களும், மீன்பிடியும் விவசாயமும் மிகச் செழித்த இயற்கை வளமும், அழகிய சுற்றுலா மையங்களும், வரலாற்றுப் புகழ்மிக்க தெய்வத் திருத்தலங்களும் அமைந்த வலி.வடக்குப் பகுதியை மக்களற்ற இராணுவப் பிரதேசமாக வைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்துவிடலாமென்றோ, புனரமைத்து விடலாமென்றோ - எவரும் எண்ணினால் அது மக்களை அப்பட்டமாக ஏமாற்றுவதாகவே இருக்கும்.

எனவே - உடனடியாகவும், தெளிவாகவும் வலி. வடக்குக்கான மீளக்குடியமர்வைத் துரிதப்படுத்தும், அழுத்தம் தரும் செயற்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். அதற்குச் சகல தரப்பினரும் விசுவாசத்துடன் ஒத்துழைக்கவும் வேண்டும்.

இவ்வாறின்றேல்- நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கின்றோம் என்பதுதான் உண்மையானதாக இருக்கும்.

# ஐ. நா. மனித உரிமை ஆணையகம் சந்திரிகாவுக்கு எதிராகத் தீர்ப்பு!

## ஜயலத் கூறுகிறார்; நிமால் சிறிபால மறுக்கிறார்

(கொழும்பு நிருபர்)

வன்னிக்குச் சென்று மருத்துவ உதவிகள் செய்தமைக்காக ஜனாதிபதி சந்திரிகா தன்மீது சாட்டிய குற்றச்சாட்டுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஸ்தாபனம் கண்டித்திருப்பதுடன் சந்திரிகாவுக்கு எதிராகத் தீர்ப்பும் கூறியிருப்பதாக வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா கூறினார்.

அண்மையில் இலண்டன் சென்று திரும்பிய அவர் இக்கருத்தைக் கொழும்பு ஊடகவியலாளர்கள் மத்தியில் வெளியிட்டார்.

ஆனால், இக்கருத்துத் தவறானது என்றும் - ஜயலத் பொய்யான தகவலைக் கூறுவதாகவும் - பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஜயலத் ஜயவர்த்தனா கூறியபடி ஐ.நா. மனித உரிமைகள் ஸ்தாபனம் எதுவித தீர்ப்பும் வெளியிடவில்லை எனத் தெரிவித்த அவர் -

தற்போது ஐ.தே.க. அரசாங்கம் செய்துவரும் மனித உரிமை மீறல்கள் பற்றித் தான் உலகளவில் பிரசாரம் செய்யப் போவதாகவும் குறிப்பிட்டார்.

# கசிப்பு உற்பத்திப் பொருட்கள் தீயிட்டு அழிக்கப்பட்டன!

## கசிப்பு ஒழிப்புப் பிரிவு நடவடிக்கை

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கொம்பாந்தரைப் பகுதியில் வீடொன்றில் இருந்து பெருமளவிலான கசிப்பு, கோடா என்பன மீட்கப்பட்டு வீட்டிற்கு வெளியே வைத்து எரிக்கப்பட்டன.

வல்வெட்டித்துறையில் பிரதேச கசிப்பு ஒழிப்புக் குழுவினருக்கு கடந்த புதனன்று பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்து கசிப்பு ஒழிப்புப் பிரிவினர் அங்கு சென்றபோது கசிப்பு உற்பத்தி செய்து கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

கசிப்பு உற்பத்திக்காக தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்த ஆயிரம் லீற்றர் கோடா, 20 போத்தலுக்கு மேற்பட்ட கசிப்பு, மற்றும் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களும் மீட்கப்பட்டு வீட்டுக்கு வெளியே வைத்து உரியவரால் தீமூட்டி எரிக்கப்பட்டன.

இங்கிருந்தே கசிப்பு வடமராட்சியின் அநேக பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அன்றையதினம் இலந்தைக்காட்டுப் பகுதியிலும் பெருமளவிலான கசிப்பும், உற்பத்தி செய்யும் உபகரணங்களும் மீட்கப்பட்டு எரியூட்டப்பட்டது. (23)

## களுத்துறைக் கைதிகள் போராட்டம் தொடரும் நிலையில்

# மட்டக்களப்பு சிறைக் கைதிகளும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்!

(கொழும்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 16 தமிழ் அரசியல் கைதிகள் நாடு எங்கும் உள்ள அரசியல் தமிழ்க்கைதிகளை விடுதலை செய்யக் கோரி நேற்றுக்காலை ஆறு மணியில் இருந்து உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

இதேவேளை - 139 தமிழ்க்கைதிகள் களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர் என்பது தெரிந்ததே. அவர்களின் 5தமிழ்க்கைதிகளின் நிலைமை மோசமானதை அடுத்து அவர்கள் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் - களுத்துறைச் சிறைக் கைதிகளில் கோரிக்கையை முன்னெடுத்து அரசாங்கப் பிரதிநிதிகளில் ஒருவர் தங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனக்கோரி 11 பெண் கைதிகளும் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

நாடு எங்கும் உள்ள சிறைக்கூடங்களில் வாடும் தமிழ் கைதிகள் எந்தவித நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் மூன்று சிறைச்சாலைகளிலும் உண்ணாவிரதப் போராட்டம் நடந்துவருவது குறிப்பிடத்தக்கது.

# இந்து ஆலயங்களின் ஒன்றியம் தென்மராட்சியில் உதயம்

(சங்கத்தானை)

தென்மராட்சி பிரசேத்தில் இந்து ஆலயங்களின் ஒன்றியம் உருவாக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி அரசியல் துறையினரின்அனுசரணையுடன், அரசியற்துறைப் பணிமனையில் இடம் பெற்ற கலந்துரையாடலை அடுத்தே ஒன்றியத்திற்கான நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்னர் எனவும்

அண்மைக்காலமாக இந்து ஆலயங்களில் நிலவி வந்த நிர்வாக, சொத்துப்பிணக்குகள் அனைத்தும் இவ் ஒன்றியத்தினால் தீர்த்துவைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (30)

## அன்னநடை நடக்கப்போய் தன் நடையும் இழந்தது போல...

சமாதானத்தின் தேவையும், தொடர்பும், சந்திப்பும் பல்வேறு வடிவங்களில் இனம், மதம், மொழி குழுமங்கள் ஒன்றிணைவதில் மிகவேகமாக செயற்படுவதில் தனிமனித குழும எண்ணங்கள் பகிர பல நிறுவனங்கள், அமைப்புக்கள் முனைந்து வருவது கண்கூடு.

போரின் காயங்கள் ஆற்றுப்படுத்தபட வேண்டியதும் சமாதான ஒன்றிப்புக்கள் கள்ளங்கபடமின்றி ஏற்படுத்தப்படுவதும் தவறுகள் அற்றவை. இதற்குள் முகமூடி இட்ட உறவு பரிமாற்றங்[illegible] மட்டிலும் விழிப்புணர்வு மிகஅவசியம்.

இதைவிட மிகமுக்கியமானது தம் அடையாளங்களை தொலைத்து எல்லாம் ஒன்று என ஏமாறி 'அன்னநடை நடக்கப் போய் தன் நடையும் இழந்த காகம் போல்' இராது தமது அடையாளங்கள் கலைப்பண்பாட்டுகள் விழுமியங்களை தொலைத்து தனித்துவங்களை மறந்து அழிந்து போவதில் ஈடுபடாது காத்தலும் சுயத்தின் வெளிப்பாடுகளே.

சென்ற வாரம் யாழ். நகரில் இலங்கையின் பல பாக சிறுவர் ஒன்று கூடலில் ~ தம் உறவை பகிர வந்த தென்பகுதிச் சிறுவர்கள் தம் ஆற்றல் சிறப்புக்களை வெளிப்படுத்தும்போது தமது மொழி, இன, கலாசாரப்பண்பாடு அடையாளங்களை தொலைத்திடாது வெளிப்படுத்திய சிறப்பு பாராட்டப்படத்தக்கதே. எம் மக்கள் தமிழ்ப் பண்பாட்டு கலாசார அடையாளங்களை தொலைத்து விட்டார்களா என அவ்வரங்கில் தேடவைத்தது கவலை தரும் ஓர் விடயமாகும்.

எந்த இனமும் தம் அடையாளங்களை இழந்து விட்டால் அதன் தனித்துவம் அழிந்துவிடும். அதனை வழிகாட்ட வேண்டிய பெற்றோரும், ஆசான்களும் சிறுவர்களிடம் தவறாக விவாதித்து விட்டு அழகுபார்த்த காட்சிகள் ஒவ்வொன்றும் தூர நோக்கற்று தவறான வழிகாட்டலையே வெளிப்படுத்தியது. பெற்றோர் , ஆசிரியர்கள் ~ தம் சிறுவர்கள் தம் அடையாளங்களை புரிய , கலாசார பண்பாட்டு விழுமியங்களை உணர்த்தும் விளக்கங்கள், சிறப்புகள் பற்றிய ஆழ்ந்த சிந்தனை தூர நோக்கு, பார்வை தாய்மொழி, தாய்நாடு என்பதுபோல தம் தனித்துவத்தை வெளிப்படுத்தும் பண்பாட்டுக்கோலங்களை சகல சந்தர்ப்பங்களிலும் உணர்த்த முயலாதபோது, ஆள்பாதி ஆடைபாதி அழிவுச் செயல்களில் சமூக அடையாளங்களை தொலைத்து வாழும் ~ சீர்கெட்ட வாழ்வுக்கு துணை போதல் ~ மேற்கத்தைய மோகமும், சினிமா மாயையும், வழிகாட்டிகளான கல்விச்சாலை ஆசான்களையும் பற்றிப் பிடித்து விட்டதோ என கவலை கொள்ள வைக்கின்றது.

குழந்தைகளின் செயலில் தவறில்லை. அதனை விதைக்கும் வழிகாட்டிகளே அடையாளங்களை தொலைத்து ஆறடி வளர்த்தோமே என புகழ்ந்துரைப்பதில் பயன் ஏதுமில்லை. பொறுப் புள்ளவர்கள் பொறுப்பை பொறுப்போடு காப்பாற்றுவீர்.

- சேயோன் -

# முற்றுகைக்குள் யசீர் அரபாத்தும் பாலஸ்தீன விடுதலையும்; உலகெங்கும் போராடும் மக்களுக்கான ஒரு பாடம்!



யசீர் அரபாத்

பாலஸ்தீன விடுதலைப் போராட்டமும், அதனை வழிநடாத்திய இயக்கமும் (PLO) பாலஸ்தீன மக்களும் நெருக்கடிமிக்க காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இரு துருவ அரசியல் தகர்ந்தபோது தொடங்கிய நெருக்கடி என்றுமே அகன்று போகாமல் தொடர்கிறது. பாலஸ்தீன மக்கள் கற்களாலும், பொல்லுகளாலும் போராட வேண்டிய அபாயம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. பாலஸ்தீனர்களின் எதிரிகள் நவீன இராணுவ ஆயுத தளபாடங்களுடனும், பலமான இராணுவத்துடனும் படையெடுக்கும்போது பாலஸ்தீனர்களின் வெறும் கற்களும், பொல்லுகளும் எந்த மாற்றத்தையும் நிகழ்த்திவிடப் போவதில்லை. அது மட்டுமல்ல ஒரு துருவ அரசியல் இஸ்ரேலியர்களுக்கு பெரும் பலத்தை அளிக்கின்றது. பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் இந்த நிலையை எவ்வாறு வேகமாக அடைந்தது என்பதை சுருக்கமாக நோக்குவோம்.

### வரலாறு

பாலஸ்தீனர்களும், யூதர்களும், பாலஸ்தீன - இஸ்ரேலியப் பிரதேசத்தில் பல நூற்றாண்டுகள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் நிறையவே காணப்படுகின்றன. ஏன் அமெரிக்கர்கள் அமெரிக்கக் கண்டத்தில் வாழ்ந்த காலப்பகுதியை விட இவ்விரு இனத்தவரும் அப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக பல நூற்றாண்டுகள் வாழ்ந்துள்ளனர். எனவே அப்பிரதேசம் பாலஸ்தீனர்களுக்கும், யூதர்களுக்கும் தாயகம். அதனைப் பின்னணியாகக் கொண்டே 1948ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பாகப்பிரிவினை நிகழ்ந்தது. ஆனால் அப்பிரிவினையை இருதரப்பும் மீறியது மட்டுமன்றி யூதர்கள் ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் வெற்றி கண்டனர். பாலஸ்தீனர்கள் யூதர்களின் நெருக்கடியை எதிர்கொள்ள ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் பரஸ்பரம் ஆயுதப்போர் பல யுத்தங்களுக்கு வழிவகுத்ததுடன் பாலஸ்தீனர்களுக்கான அரபு உலகத்தின் ஆதரவுக்கும் வழி வகுத்தது. யூதர்கள் ஆரம்பத்தில் சோவியத் யூனியனின் ஆதரவைப் பெற்றாலும் காலப்போக்கில் சோவியத் - பாலஸ்தீனர்களையும், அமெரிக்கா - யூதர்களையும் ஆதரிக்க முனைந்தன. இதனால் மேற்காசிய - அரசியலில் அதிகாரச் சமநிலை சர்வதேச வல்லரசுகள் இரண்டினாலும் பேணப்பட்டது. ஆனால் சோவியத் - பாலஸ்தீன நெருக்கத்தை எதிர்கொள்ளும் பொறுப்பை அமெரிக்காவிடம் ஒப்படைத்த யூதர்கள் அரபு உலகத்திலிருந்து பாலஸ்தீனர்களை உடைக்கப் பல அரசியல் நடவடிக்கைகளைத் தொடங்கினர்

### காம்டேவிட் உடன்படிக்கை

1979 ஆம் ஆண்டு எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவின் அனுசரணையுடன் எட்டப்பட்ட உடனபாடே காம்டேவிட் உடன்படிக்கை என்று அழைக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கையைத் தொடர்ந்து பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கான ஆதரவை எகிப்து நிறுத்திக் கொண்டதுடன் அமெரிக்காவின் பொருளாதார உதவிக்காகவும், ஒத்துழைப்புக்காகவும் இஸ்ரேலை முதல் முதலில் அங்கீகரித்த அரபு உலக நாடு என்ற அவமானத்தையும் பெற்றுக் கொண்டது. பாலஸ்தீன விடுதலை இயக்கமும் தமது தலைமையகத்தையும், பயிற்சி முகாங்களையும் உளவுபார்க்கும் மையத்தையும் உடனடியாக லெபனானுக்கு இடம் மாற்றியது. மிக நீண்டகாலம் லெபனானுடன் பாலஸ்தீனம் உறவை பேணிவந்தபோதும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பினாலும், எல்லை மீறிய தாக்குதலாலும் பாலஸ்தீன போராளிகளுடன் கசப்புணர்வு தீவிரமடைந்தது. இதேபோன்று சிரியா, ஜோர்தான் என்பவற்றிலிருந்தும் பாலஸ்தீன போராளிகளும், விடுதலை அமைப்பும் அன்னியப்படத் தொடங்கியது. ஆனாலும் ஐ.நா. சபையில் ஓர் அங்கத்துவத்தை வகித்த பாலஸதீனவிடுதலை இயக்கம் சோவியத் யூனியனின் ஆதரவுடன் ஓரளவு போராட்டத்தையும், மக்களையும் பாதுகாப்பாக வைத்திருக்க முயன்றது

### மேற்கின் உதவி

இவ்வாறு அயல்நாடுகளால் பாலஸ்தீன விடுதலை இயக்கம் படிப்படியாக காட்டிக்கொடுக்கப்பட்ட நிலையில் ஒருபுறம் நெருக்கடியும், மறுபுறம் போராட்டத்துக்கான ஆதரவும் மேற்கு நாடுகளில் இருந்து கிடைக்கத் தொடங்கியது. குறிப்பாக பிரித்தானியா பாலஸ்தீன விடுதலைப்போராட்டத்திற்கு பெரும் நிதிஉதவியை அளிக்கத்தொடங்கியது. அரசசார்பற்ற அமைப்புகளும், அவற்றின் பணிகளும் இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதிகளில் அகதிகளாக்கப்பட்ட பாலஸ்தீனர்களுக்கு உதவிவழங்கும் மனிதாபிமானப் (?) பணியில் ஈடுபட்டன. இவ்வமைப்புகளுக்கு அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் வாழ்ந்த யூதர்கள் நிதியுதவிகளை வாரி இறைத்தனர். அவற்றின் கணிசமான பங்கு பாலஸ்தீன மக்களைச் சென்றடைந்தது மட்டுமன்றி போராளிகளும் அவர்களது உறவினர்களுக்கும் இந்நிதியின் தொகை சென்றடைய அரசசார்பற்ற அமைப்புக்கள் உழைத்தன.

## வி.ரி.கணேசலிங்கம்

இதனால் யூதர்களின் நெருக்கடிக்குள்ளும், அபாயத்தின் மத்தியிலும் பாலஸ்தீன மக்களும், போராளிகளும் தப்பிப்பிழைத்தனர். மேற்குலகம் கூட தமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கின்றது என்ற உணர்வை யசீர் அரபாத் கூடக் கொண்டிருந்தார். அதனால் ஏற்பட்ட அபாயத்தையும், உண்மையான உள்நோக்கத்தையும் ஆரம்பத்தில் அரபாத் கூட உணர்ந்து கொள்ளவில்லை. அவர் விளங்கிக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் விடுதலைப் போராட்டத்தின் பலம் முடிவிடத்தை அடைந்துவிட்டதென்றே கூறலாம். அதாவது மேற்குலகம் வழங்கிய நிதியும், உதவியும், ஒத்துழைப்பும், பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் போராளிகளையும், மக்களையும் போராட்டத்திலிருந்து அன்னியப்படுத்த ஆரம்பித்தது. படிப்படியாக போராளிகள் பி.எல்.ஓவைக் கைவிட்டு வேறு நாடுகளுக்கும், தொழில் வாய்ப்புக்களுக்கும், மற்றும் சுக வாழ்வுக்காகவும் அசையத் தொடங்கினர். மக்கள் இயக்கத்தின் நோக்கத்தையும், இலக்கையும்விட மேற்கு வாழ்க்கை முறையையும், கலாசாரத்தையும் நோக்கி நகர்ந்தார்கள். போராட்டம் அபாயகரமானது என அரசசார்பற்ற அமைப்புக்களாலும், அதன் உளவியல் நிபுணர்களாலும் போதிக்கப்பட்டது. போருக்குள் வாழ முடியாது என்பதையும், போராட்டம் வீணானது என்பதையும் பாலஸ்தீன மக்களுக்கு அறிவியல்பூர்வமாக புகட்டினார்கள். போரைவிடச் சமாதானம், ஜனநாயகம் சிறந்ததெனக் கருத்துக் கூறி மக்களைப் போராட்டத்திலிருந்து அன்னியப்படுத்தினார்கள். போராளிகளுக்கு திருமணம் ஒரு சொர்க்கமானது மட்டுமல்ல பாலியல் - முறையற்ற பாலியல் போன்றவையும் சொர்க்கமானது என்ற உணர்வை சிறுவர்கள் மத்தியிலும், அவர்கள் வாழ்ந்த அகதி முகாம்களுக்குள்ளும் உணர்த்தினர். சிறுவர்களை, இளந்தலைமுறையினை பாலியல் தொடர்பான செயல்களுக்கேற்பத் தூண்டினர். அதனை உயர்ந்த வாழ்க்கையாக போதித்தபோது தாயகம், சுயநிர்ணயம், போராட்டம் என்பன காற்றில் பறக்கும் சுலோகமாக மாறியது.

### காஸா - ஜெரிக்கோ உடன்பாடு

பாலஸ்தீன விடுதலைப் போராட்டம், கையறுநிலையை அடையும் தறுவாயில் இஸ்ரேலும், அமெரிக்காவும் இணைந்து கொடுத்த நெருக்கடியால் எட்டப்பட்ட உடன்பாடு. கணிசமான சலுகைகளும், வாய்ப்புக்களும் பாலஸ்தீன மக்களுக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையை உடன்பாடு கொடுத்திருந்தது. ஆனால் இஸ்ரேலியப் பிரதமர் இட்சாக் ராபின் சுட்டுக்கொல்லப்பட்டதும் உடன்படிக்கை அமுல்படுத்துவதில் சிககல் தொடங்கியது. நம்பிக்கையீனங்கள் அதிகரித்தன. படுகொலைகள், மனித வெடிகுண்டுகள், தற்கொலைத் தாக்குதல்கள் என்பன விரிவடைந்தன. பல பிரதமர்கள் வந்தனர். எவருமே காஸா - ஜெரிக்கோ உடன்பாட்டை அமுல்படுத்தாது ஆட்சியை நகர்த்திச் சென்றனர். 1993ஆம் ஆண்டில் செய்யப்பட்ட உடன்பாட்டை அமுல்படுத்த மீண்டும் ஒரு உடன்பாட்டை 1998இல் எட்டினர். அதனை வைநதி உடன்படிக்கை எனக் கூறிக் கொண்டனர். இரண்டுமே அமெரிக்காவில் செய்யப்பட்டனவே அன்றி வேறு எந்த முன்னேற்றத்தையும் அடைந்ததாக கணக்குப் போடமுடியாது. மாறாக இவ்வுடன் படிக்கையால் பாலஸ்தீன மக்களையும், விடுதலை இயக்கத்தையும் தவிர்ந்த நிலையில் இஸ்ரேல் கடந்த நூற்றாண்டின் அரைப்பகுதியைப் போன்று இந்த நூற்றாண்டும் பாலஸ்தீனர்களின் தாயகக் கோட்பாட்டுக்கு பங்கம் விளைவிக்கத் தீர்மானித்துவிட்டது. அதனை அமுல்படுத்த சர்வதேச உதவியையும், பலத்தையும் இஸ்ரேல் கொண்டிருக்கின்றது. படிப்படியாக நகர்த்தி காஸாப் பகுதியிலும் - ஜெரிக்கோப் பிரதேசத்தின் சில நிலப்பகுதியிலும் பாலஸ்தீனர்களின் இருப்பை சரிபார்த்துக் கொள்ளுமாயின் இஸ்ரேலிய ராச்சியத்தின் சிறுபான்மையினராக பாலஸ்தீனர்களை ஆக்குவதில் யூதர்கள் வெற்றியடைந்து விடுவார்கள். அரபாத்தின் இயலாமை வெகுவிரைவில் அவரது மரணத்தை உறுதிப்படுத்தும்போல் தெரிகிறது. அந்நிலையில் - பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் திசையை யூதர்களும், அமெரிக்கர்களும் இணைந்து தமக்குச் சாதகமான நிலைக்குக் கொண்டு சென்று விடுவார்கள். ஹமாஸ் மட்டுமே அமெரிக்கர்களுக்கும், யூதர்களுக்கும் ஆபத்தான அமைப்பாக விளங்குகிறது. இதனால் தற்போது ஹமாஸை கையாளும் கூட்டாக இறங்கியுள்ளனர். அதனை அழிப்பதற்கான வேலைத்திட்டத்தில் அரபாத்தும் தொடர்புபட்டுள்ளார் என ஹமாஸ் குற்றஞ்சாட்டுகிறது. ஆனால் அமெரிக்க உளவுப்பிரிவின் (CIA) தலைவா ஜோர்ஜ் ஸ்ரெனட் பாலஸ்தீனத்துக்கு வருகைதந்தபோது இஸ்ரேலின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர பாலஸ்தீன அமைப்பு முன்வருமாயின் பாலஸ்தீனத்தின் அரசியல், பொருளாதார பாதுகாப்பு விருத்திகளுக்கு இஸ்ரேலும், அமெரிக்காவும் உதவுமென உத்தரவாதமளித்துள்ளார். அதற்கு அரபாத் உடன்பட்டதாகவும், அது தற்போது சாத்தியமாகாத நிலையிலேயே அரபாத் அடிக்கடி முற்றுகையிடப்படுகிறார் எனவும் தெரிய வருகிறது.



இஸ்ரேலியப் படையினரால் சோதனையிடப்படும் பாலஸ்தீனரின் வாகனம் ஒன்று.



ஏரியல் ஷெரோன்

### தற்போதைய நிலை.

பாலஸ்தீனர் தொடர்பாக எட்டப்பட்ட எந்த உடன்படிக்கையும் அமுலாகியதாகத் தகவலில்லை. அரபாத் பரந்த சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்ட நிலையில் பாலஸ்தீனர்கள் போராட்ட வழிமுறை எதுவுமின்றி வெறும் கரங்களோடு பெரும் இராணுவ இயந்திரத்தை எதிர்கொள்கின்ற நிலையே காணப்படுகின்றது. உலகப் பயங்கரவாதப் பிரச்சினையும், மேற்காசியப் பிரச்சினையும் மேலும் பாலஸ்தீனர்களை கௌரவம் அற்றவர்களாக மாற்றியுள்ளது. இதனால் விரக்தியடைந்த பாலஸ்தீன மக்கள் ஹமாஸ் இயக்கத்தை நோக்கிப் படையெடுப்பதைத் தவிர்க்கமுடியாத போராட்ட வழிமுறையாகக் கொள்ள முனைந்து விட்டனர். அப்படியான பார்வையுள்ள பாலஸ்தீனர்களுக்கு அரபாத் அபாயமானவராகக்கூடத் தென்படலாம். ஹமாஸின் போராட்ட வழிமுறையின் முன்னால் அரபாத்தும் பி.எல்.ஓவும் எதனையும் இனி சாதிக்க முடியாது என்பதையே காட்டுகின்றது.

இதனை சகல போராடும் மக்களும் அனுபவமாகக் கொண்டிருப்பார்களாயின் எதிர் காலமாறுதல்களுக்குள் பாலஸ்தீனாகள்•போன்ற நிலை ஏற்படாது தவிர்க்கலாம். வரலாற்றில் இருந்து அனுபவத்தைக் கற்றுக் கொள்வது போன்று அனுபவத்திலிருந்து அனுபவத்தை பாடமாக கற்றுக்கொள்வது நன்று.

## வடமராட்சி கிழக்கில்

# பச்சை மரங்கள் வெட்டப்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!

### அரசியல் துறையினர் அறிவிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் உள்ள காடுகளில் பச்சை மரங்கள் வெட்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும என வல்வெட்டித்துறை அரசியல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இச்சம்பவம் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

வடமராட்சி கிழக்குப் பகுதியில் தினமும் அதிகளவிலான பச்சை மரங்கள் வெட்டப்படுவதாக அப்பகுதியிலுள்ள பொதுமக்கள், பொது அமைப்புகள் முறையிட்ட வண்ணம் உள்ளன. குடத்தனை, அம்பன், மணற்காடு, பொற்பதி, வல்லிபுரம் பகுதிகளில் சவுக்கு, சஞ்சீவி, பொற்பத்தை, கண்டல் மரங்கள் வெட்டப்பட்டு வடமராச்சி கிழக்கிற்கு வெளியே எடுத்துச் செல்லப்படுகின்றது. இதனால் இப்பகுதியின் சூழல் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எனவே பச்சை மரங்கள் வெட்டுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் அவ்வாறு தறிப்பவர் மீது கடும் நடவ டிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நள்ளிரவில் மிளகாய்த் தூள் இடித்துத் தர அழைத்தவர்களால் பெண் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு நிருபர்)

அம்பாறை, தம்பிலுவிலில் நள்ளிரவில் வீட்டினுள் நுழைந்து மிளகாய்தூள் இடித்துத் தருமாறு கேட்ட ஆயுதபாணிகள் குடும்பப்பெண் ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

தம்பிலுவில் பகுதியில் வசித்து வந்த சிறிதரன் மேகலா என்ற 36 வயதுடைய 2 பிள்ளைகளின் தாயாரான பெண்ணே உயிரிழந்தவராவார். மேற்படி பெண்ணின் வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் இவரது கணவனை வெளியில் வருமாறு கூறிக் கதவை இடித்துத் தள்ளியுள்ளனர்.

கதவைத் திறந்தபோது மிளகாய்த் தூள் இடித்துத் தரவேண்டும் எனக் கூறியவாறு கணவனைச் சுட முற்பட்டனர். அவர் சற்று விலகி துப்பாக்கிச் சூட்டில் இருந்து தப்பிவிட மனைவியான மேகலாவின் உடலில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்து அவர் உயிரிழந்தார்.

இச் சம்பவம் தொடர்பான சந்தேக நபர் ஒருவரை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# மக்களின் அடிப்படை உரிமைகளை மதித்தால் நாட்டில் உண்மையான சமாதானம் நீடிக்கும்

## கொழும்புப் பல்கலைக்கழக சட்டப்பீடாதிபதி செல்வக்குமரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். அனைத்து மக்களுக்குமான சகல உரிமைகளும் வழங்கப்படவேண்டும் எத்தரப்பாக இருந்தாலும் மக்களுக்கான அனைத்து உரிமைகளையும் அவர்கள் மதித்து செயற்பட வேண்டும். இவ்வாறு செயற்பட்டால் தான் நாட்டில் உண்மையான சமாதானம் நிலைத்து நீடிக்க முடியும். இவ்வாறு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் பீடாதிபதியும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளருமாகிய திரு.என். செல்வக்குமரன் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார். இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்த இவர் யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் பேணப்படுவது தொடபான நிலைமைகளை ஆராய்வதற்காக பல் வேறுதரப்பினருடனும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். தற்போதைய சூழலில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது குறித்து நமது நிருபரிடம் கருத்து வெளியிடும் போதே செல்வக்குமரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனிதனின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்படாமல் விடப்படுகின்ற இடத்தில் இருந்துதான் பிரச்சினைகள் உருவாகின்றன. இதனால் தான் நாட்டில் அமைதியின்மை தோன்றியது. தற்போது நிலவும் அமைதியும் சமாதானமும் உண்மையானதாக நீடிக்க வேண்டும் என்றால் அடிப்படை மனித உரிமைகள் மதிக்கப்படவேண்டும். அத்துடன் மனித உரிமைகளை அனுபவிப்பதற்கு பொதுமக்கள் மத்தியிலும் இவை தொடர்பான விழிப்புணர்வு இருக்கவேண்டும். மனித உரிமைகள் தொடர்பான அனைத்து அம்சங்களையும் பொதுமக்கள் அறிந்திருக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(க)

## திருமுறை விழா

சங்கானை கல்விக்கோட்ட சைவத்திருமுறை விழாவும், சைவ நெறித்தொண்டு படு நிகழ்ச்சிப் பரிசளிப்பு விழாவும் இன்று காலை 9.00 மணிக்கு யா/பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா தலைமையில் நடைபெறும். இவ்விழாவிற்கு இந்து சமய கலாச்சார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்கள் ஆசியுரை நல்வார்.

## மீள இயங்கும் சங்கக் கிளை

(காரைநகர்)

காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளை இல. 10 மீண்டும் இயங்கத்தொடங்கியுள்ளது.

கடந்த 12 வருடங்களாகச் செயற்படாமல் இருந்த இக்கிளையானது தற்போது மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இயங்க ஆரம்பித்துள்ளது. (52)

# இரண்டு நீதி அமைப்புக்கள் நாட்டில் இப்போது இயங்குகின்றன

## பொதுஜன ஐக்கிய முன்னணி பேச்சாளர் சரத் அமுனுகம

(கொழும்பு நிருபர்)

நாட்டில் இப்போது இரண்டு நீதி அமைப்புகள் இயங்குகின்றன. இவை இரண்டையும் எதிர் கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும்போதே அவர் இப்படிக்கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது :-

விடுதலைப்புலிகளால் வில்கம்விகாரைப்பகுதியில் ஏழு இராணுவத்தினர் கைதாவதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.

விடுதலைப்புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டும் கூட கைதான படையினர் விடுவிக்கப்படவில்லை. போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் இந்த விடயத்தில் தோற்றுவிட்டது என்றார்.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட ஒப்பந்தம் நாட்டை மோசமான நிலைக்குத் தள்ளிவிட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

## இன்றைய நாள் இனிய நாள்

05.10.2002 - சனிக்கிழமை

| | |
|---|---|
| மேடம் :- | பொருள் வரவு, எடுத்த காரியம் வெற்றி, நோய்நீக்கம், எதிரிதலை குனிவு, கல்வி முன்னேற்றம், பெண்களால் அவமானம். |
| இடபம் :- | கீர்த்தி குறைவு, பொதுசேவையில் மதிப்புக் குறைவு, பிரயாணத்தடை, தேகசுபக்குறைவு, கல்வியில் ஊக்கம் வேண்டும். |
| மிதுனம் :- | மாதா சுகயீனம், வாகனச்செலவு, நம்பிக்கை குறைவு, வீண் அலைச்சல், கல்வியில் ஊக்கம் வேண்டும். |
| கர்க்கடகம் :- | எடுத்த காரியம் வெற்றி, பெண்கள் மகிழ்ச்சி, சுபச் செலவு, பித்த நோய், கல்வி முன்னேற்றம், கலை நிகழ்ச்சி ரசனை. |
| சிங்கம் :- | பணவரவில் மந்தநிலை. வீண்செலவு, வாக்குவாதம், மனச் சஞ்சலம், மதிப்புக்குறைவு, காரியத்தடை, கல்வியில் முன்னேற்றம். |
| கன்னி :- | சுபச்செலவு, பணவரவு, பெண்கள் மகிழ்ச்சி, உறவினர் வருகை, கல்வி முன்னேற்றம். |

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.

| | |
|---|---|
| துலாம் :- | வீண்செலவு, தேகசுகக்குறைவு, தேவையற்ற சண்டை, மனச் சஞ்சலம், கல்வியில் ஊக்கம் வேண்டும். |
| விருச்சிகம் :- | செய்தொழில் மேன்மை, மகிழ்ச்சி, அறிவுடையோர் சகவாசம், பெண்கள் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம். |
| தனு :- | தொழில் முன்னேற்றம், புதிய முயற்சி, மரியாதை, கௌரவம், வெளியூர்ப் பயணம். |
| மகரம் :- | பிதாவுடன் மனஸ்தாபம், வைத்தியச் செலவு, தேவையற்ற பயம், வயிற்றில் ரோகம், கல்வியில் ஊக்கம் வேண்டும். |
| கும்பம் :- | தூரப்பிரயாணம் தவிர்க்கவும், முயற்சி தடை, எதிர்பாராத பயம், தேகசுகக்குறைவு, கல்வியில் ஊக்கக்குறைவு. |
| மீனம் :- | வாகனவசதி, கௌரவம், பணவரவு, அறுசுவையுண்டி, பெண்கள் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், கலை நிகழ்ச்சி ரசனை. |

# திருநெல்வேலி விபத்தில் இளைஞர் படுகாயம்

(மீசாலை)

நேற்றுக்காலை 8.30 மணியளவில் திருநெல்வேலிச் சந்தைக்கும் தபால் கட்டைச் சந்திக்கும் இடையில் இடம்பெற்ற லாண்ட்மாஸ்ரர்-மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் சிக்கி இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

கணேசலிங்கம் கோணேஸ்வரன் (வயது 20) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பலாலி வீதியூடாக புன்னாலைக்கட்டுவன் நோக்கிச் சென்றுகொண்டிருந்த லாண்ட்மாஸ்டரை சந்தியில் திருப்ப முற்பட்ட போது விபத்து ஏற்பட்டதாகவும் இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். (25)

## அலுவலகம் இடமாற்றம

(ஈச்சமோட்டை)

சிறாம்பியடிப் பகுதிக்கான சமுர்த்தி உத்தியோகத்தரின் அலுவல கம் இடமாற்றப்பட்டுள்ளது.

இரண்டாம் ஒழுங்கை பலாலி வீதியில் இயங்கி வந்த அலுவலகம் தறபோது யாழ் வீதியில் உள்ள j/79 கிராம அலுவலர் அலுவல கத்தில் இயங்கிவருகிறது. (58)

## விவசாய உபகரணங்கள் கோப்பாய் பிரிவில் விநியோகம்

(ஆவரங்கால்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வன்னியில் இருந்து வந்து மீளக்குடியமர்ந்தவர்களிற்கு பட்டினிக்கெதிரான நிறுவனம் விவசாய உபகரணங்கள் வழங்கி வருகிறது.

புத்தூர்,கதிரிப்பாய் ஆகிய கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்டவர்களிற்கு விவசாய உள்ளீடுகள் மற்றும் உபகரண ங்கள் என்பன வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (80)

## செபமாலை அன்னை திருவிழா

(பாண்டியன்தாழ்வு)

கொழும்புத்துறை செபமாலை அன்னையின் திருவிழா இறுதி நிகழ்வுகள் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்று காலை 9மணிக்கு யாழ் ஆயர் வண.தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளாரால் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

## குருவே வாழ்க நீடூழி!

ஆண்டில் ஒரு நாள் குருவைத் துதித்திட  
வகுத்தார் பெரியோர் இந்நாளை!  
அறிவைப் புகட்டும் குருவை மதித்திடப்  
பணித்தார் பெரியோர் இந்நாளை!!  
நன்னெறி காட்டிடும் குருவை பணிந்திடக்  
குறித்தார் பெரியோர் இந்நாளை!  
இந்நாள் பொன்னாள் குருவைத் துதித்திட  
இணைந்தோம் நாங்கள் நன்னாளில்!!

காலங்கள் தோறும் நிலைத்திடும் செல்வம்  
கல்விச்செல்வம் ஒன்றேதான்!  
ஞாலங்கள் தோறும் குறையாச் செல்வம்  
கல்விச் செல்வம் மட்டும் தான்!!  
துறவிகள் முதலாய் நாடிடும் செல்வம்  
கல்விச் செல்வம் மாத்திரம் தான்!  
பிறவிகள் தோறும் தொடரும் செல்வமும்  
கல்விச் செல்வம் ஒன்றே தான்!!

கல்விச் செல்வத்தை அள்ளித் தருகின்ற  
குருவே வாழ்க நீடூழி!  
குறையாச் செல்வத்தை சொல்லித்தருகின்ற  
குருவே வாழ்க நீடூழி!!  
அழியாச் செல்வத்தை அள்ளித் தருகின்ற  
குருவே வாழ்க நீடூழி!  
அருபெருஞ் செல்வத்தை சொல்லித்தருகின்ற  
குருவே வாழ்க நீடூழி!!

"முருகு"

# பஸ்மோதி மாணவிகள் பலி வாகனங்கள் மீது கல் வீச்சு

## மகாபாகேயில் களேபரம்

(கொழும்பு நிருபர்)

வெலிசறை-நீர்கொழும்பு வீதியில் மகாபாகே என்ற இடத்தில் பாதசாரிகள் கடவையில் சென்றுகொண்டிருந்த பாடசாலை மாணவிகள் மீது பஸ் மோதியதில் இரு மாணவிகள் பலியானார்கள்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் நடந்த இவ் விபத்தில் ஒரு மாணவி ஸ்தலத்திலேயே பலியானார் காயமுற்ற இன்னொரு மாணவி வைத்தியசாலையில் மரணமானதாகவும் தெரிவிக்கப்ப டுகின்றது

இவ் விபத்துச் சம்பவத்தையடுத்து அவ் வீதியால் சென்ற வாகனங்கள் மீது பொதுமக்கள் கல் வீச்சுத் தாக்குதல்களை நடத்தியதில் பதினைந்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

அப்பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து நேற்று நண்பகல் 12 மணியளவில் இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டனர். குழப்பநிலையைக் கட்டுப்படுத்துவதற்காக வன்முறையில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது இராணுவத்தினர் கண்ணீர்ப் புகைப்பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதனையடுத்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதும் இவ் வீதியூடாக நீர்கொழும்புக்கான போக்குவரத்துகள் தடைப்பட்டிருந்தன.

## விழிப்புணர்வு கருத்தரங்கு

மனித முன்னேற்ற நடுநிலையத்தினால் குடிபோதை பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும்நடாத்தப்பட்டு வருகிறது. யாழ் போதனா வைத்தியசாலையின் உள மருத்துவப் பிரிவினருடன் இணைந்து நடாதிவரும் இக் கருத்தரங்கில் குடி போதையில் இருந்து விடுவிப்பு பெறுவதற்கான வழிமுறைகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டு வருகிறது.(79)

# பன்னிரு வேங்கைகள் அஞ்சலி நிகழ்வு

## இன்று தீருவிலில்

(யாழ்ப்பாணம்)

லெப் கேணல் குமரப்பா புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 15வது ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு இன்று வல்வெட்டித்துறையில் உள்ள தீருவில் திடலில் நடைபெற உள்ளது.

தீருவில் திடலில் உள்ள பன்னிரு வேங்கைகளின் நினைவுத் தூபிக்கு அருகில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாலை 5 மணியளவில் நினைவுத்தூபிக்கு மலரஞ்சலி செலுத்தப்படும். இதனைத் தொடர்ந்து நினைவஞ்சலிக்கூட்டம் நடைபெறும். இதில் பலர் அஞ்சலி உரை நிகழ்த்தவுள்ளனர். இதனைத்தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பாதுகாப்பு வலயங்களை நீக்குக! மறுத்தால் பாராளுமன்றில் எதிர்ப்பு!!

## படை அதிகாரிகளிடம் அமைச்சர் மகேஸ்வரன்

(நமது நிருபர்)

பொது மக்களின் வாழ்விடங்களில் அமைக்கப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை உடனடியாக அகற்ற வேண்டும் இல்லையேல் பாராளுமன்றத்தில் எதிர்ப்பு நடவடிக்கையில் குதிப்போம் என இந்து சமய விவகார அமைச்சர் மகேஸ்வரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று யாழ். செயலகத்தில் மனித உரிமைகள் பாராளுமன்ற தெரிவுக் குழுவினர் கூட்டிய படை அதிகாரிகள், நீதித்துறையை சேர்ந்தோருக்கான மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய போதே அமைச்சர் மகேஸ்வரன் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

மக்களின் வசிப்பிடங்களில் அமைக்கப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் உடனடியாக நீக்கப்படவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் பலாலி, காங்கேசன்துறை என்பவையே உயர் பாதுகாப்பு வலயங்களாக கருதிக் கொள்ளக் கூடியவை. மற்றவை பொதுமக்கள் வாழ்விடங்கள். பாதுகாப்புடன் தொடர்பற்றவை என்றும் அமைச்சர் மகேஸ்வரன் சுட்டிக்காட்டினார்.

இதன்போது கருத்து தெரிவித்த படையதிகாரிகள்- புலிகளுடன் நாம் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படவேண்டும் என எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. எனவே, பாதுகாப்பு வலயங்களை அகற்றமுடியாது என்றனர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் மகேஸ்வரன்- பொதுமக்கள் தம் இருப்பிடங்களுக்கு திரும்ப வேண்டும். இதுவே எமக்குத் தேவை. புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து இவ்விடத்தில் குறிப்பிடவேண்டாம் . மக்கள் குடியேறுவதையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் தொடர்புபடுத்த வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்தார். இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால எமது எதிர்ப்பை பாராளுமன்றத்தில் காட்ட வேண்டியிருக்கும். பாராளுமன்றத்தில் செங்கோலை வைத்துக் கொண்டு இங்கு கொடுங்கோலாட்சி செய்வதில் அர்த்தமில்லை எனவும் அமைச்சர் மகேஸ்வரன் குறிப்பிட்டார்.(க)

# ஆவரங்கால் தீ விபத்தில் குழந்தை உடல் கருகி மரணம்

ஆவரங்கால் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து ஒன்றின் போது இரண்டரை வயதுக் குழந்தை ஒன்று உடல் கருகி மரணமடைந்தது.

கடந்த புதன்கிழமை மேற்படி பகுதியில் குப்பிவிளக்கு சரிந்ததனால் ஏற்பட்ட தீ விபத்தின் போது குடிசை எரிந்து நாசமாகியுள்ளது. இச்சம்பவத்தில் யோகராஜா நிசாந்தினி என்ற குழந்தை சம்பவ இடத்திலேயே உடல் கருகிப் பலியாகியது.

இதே சம்பவத்தில் இக்குழந்தையின் தந்தையான செல்லப்பா யோகராஜா (வயது 36) என்பவர் கடும் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் மேலும் இத்தீ விபத்தை அறிந்து அங்கு சென்று தீயை அணைக்க முற்பட்ட அயல் வீட்டுக்காரரான சி.குமாரவேல் (வயது30) என்பவரும் காயமடைந்தார். காயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.(80)

# தமிழ் எழுத்துத்திறன் பரீட்சையில் வலயரீதியில் வெற்றி பெற்றோர்

உலக ஆசிரியர் நாளை முன்னிட்டு வட - கிழக்கு மாகாண ஆசிரியர்களின் எழுத்தாக்கத் திறனை ஊக்குவிக்கும் வகையில் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையும் தமிழ் வளர்ச்சிக் கழகமும் இணைந்து கல்வி திணைக்களத்தின் உதவியுடன் நடத்திய போட்டித் தேர்வில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு:

யாழ்.வலயம்:

செல்வி.வாசுகி சொக்கலிங்கம் - யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, திருமதி.ச. செபமாலைதாசன்-யா/பெரியபுலம் ம.வி, திருமதி.லிங்கதேவி புஸ்பநாதன்-யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,

தீவகம்:

நடராசா பங்கையச்செல்வி-யா/காரைநகர் க.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம், அ.மனோகரன்-காரைநகர் கலாநிதி க. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம், செல்வி.ஞானாம்பிகை ஆலாலசுந்தரம்-யா/காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்.

கிளிநொச்சி:

சி.விசுவாசம்-கிளி/ பூநகரி ம.வி, திருமதி.இ.அருணாச்சலம்-கிளி/இந்துக்கல்லூரி, திருமதி.செல்வநாயகி இராஜரட்ணம்-கிளி/தருமபுரம் ம.வி.

முல்லைத்தீவு:

திருமதி.சூ.ஜெயராஜா-மு/அளம்பில் றோ.க.வித்தியாலயம், செல்வி.த.மேரிசுசி-மு/முல்லைத்தீவு ம.வி., திருமதி.கு.சிவசுந்தரம்-மு/புதுக்குடியிருப்பு ம.வி,

துணுக்காய்:

து.ஜெயதேவன்-மு/தேறாங்கண்டல் அ.த.க, இ.இன்பதாஸ்-மு/பாலிநகர் ம.வி, திருமதி.க.தனமூர்த்தி,மு/துணுக்காய் அ.த.க பாடசாலை,

வடமராட்சி:

கி.தர்மலிங்கம்-யா/ஞானாசாரியார் கல்லூரி,செல்வி.அன்னலட்சுமி கந்தசாமி-யா/நாகர் கோவில் ம.வி, திருமதி.ர.சிறீகண்ணன் யா/வட இந்து மகளிர் கல்லூரி,

வலிகாமம்:

செல்வி.பூதன் ஜெயமலர்-யா/சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, செல்வி.சாந்தலிங்கம் ஜெகதீஸ்வரி-யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, செல்வி. மீனலோசினி அருணாசலம் யா/உடுவில் மகளிர் கல்லூரி,

தென்மராட்சி: சுட்டிலக்கங்கள் 10914,10956,10853

# போக்குவரத்து தினத்தில் ஏழு பேர் விபத்தில் மரணம்

(கொழும்பு)

தேசிய போக்குவரத்து தினமான நேற்று மட்டும் வீதி விபத்தில் 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மகாபாகே விபத்தில் இரு மாணவிகளும் அத்தனகலவில் மூவரும் சிலாபத்தில் இருவருமாக மொத்தம் ஏழு பேர் நேற்றைய வீதி விபத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

# மேற்கில் தஞ்சமடைந்திருப்போரை இப்போதைக்கு திருப்பியனுப்பாதீர்!

(நமது நிருபர்)

ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள ஈழத்தமிழ் அகதிகளை உறுதியான நிரந்தர சமாதானம் வருவதற்கு முன்பதாக திருப்பியனுப்ப வேண்டாம் என யாழ். மாவட்டத்திலுள்ள பிரமுகர்கள் பலரும் யாழ்ப்பாணம் வந்துள்ள ஜேர்மன் நீதிபதிகள் குழுவிடம் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

ஜேர்மனியில் தஞ்சமடைந்துள்ள ஈழத்தமிழ் அகதிகளை திருப்பியனுப்புவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளதா என்பதை ஆராய்வதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ள 9 நீதிபதிகள் அடங்கிய குழுவினர் யாழப்பாணத்தில் கடந்த இரு நாட்களாக பிரமுகர்கள் பலரையும் அமைப்புக்களையும் சந்தித்து வருகின்றனர்.

இதன்படி- இவர்கள் கியுடெக் இயக்குநர் அருட்தந்தை. ஜெயக்குமாரையும் சந்தித்தனர்.

இக்குழுவினிடம் கருத்துரைத்த அருட்தந்தை. ஜெயக்குமார் - நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை மேற்கு நாடுகளிலிருந்து ஈழத்தமிழ் அகதிகளை திருப்பியனுப்புவது சாத்தியமானதல்ல எனக் கூறியுள்ளார்.

இக்குழுவினரிடம் அவர் மேலும் தெரிவிக்கும் போது-

தெற்கிலுள்ள அரசியல் சூழல் சமாதானத்தைக் குழப்பும் என்ற அச்சம் தற்போதும் நிலவி வருகின்றது.

மீள்குடியமர்வு மற்றும் வேலை வாய்ப்பு என்பன வடக்கு கிழக்கில் இன்னமும் நடைமுறையாகவில்லை. கண்ணி வெடிகள் அகற்றப்படவில்லை.

இக்காரணங்களால் மேற்கிலிருந்து அகதிகளை இப்போதைக்கு திருப்பி அனுப்பவேண்டாமெனக் கேட்டுக் கொண்டார்.

தன்னைச் சந்தித்த ஜேர்மன் குழுவினர் இன்னமும் சுமுகமான சூழல் ஏற்படவில்லை என்பதை புரிந்து கொள்ளக் கூடியவர்களாகவே தென்பட்டதாக அருட் தந்தை .ஜெயக்குமார் மேலும் தெரிவித்தார்.

இக்குழுவினர்-யாழ் ஆயர், அரசாங்க அதிபர் மற்றம் பல்கலைக்கழக பேராசிரியர்களையும் சந்தித்ததாகவும் தெரியவருகிறது.

# காரைநகர் கடற்பரப்பில் மீனவர் மீது தாக்குதல்

(காரைநகர்)

காரைநகர் சாந்திபுரக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச் சம்பவத்தில் தெ.உதயகுமார் (வயது 35), க.கிஸ்ணநாதன் (வயது 32) ,ஜெ.துஷ்யந்தன் (வயது 19) ஆகியோர் தாக்கப்பட்டனர்.

மேற்படி மீனவர்கள் தாங்கள் வழமையாக தொழில் புரியும் கடற்பரப்பிலேயே வைத்துத் தாக்கப்பட்டதாக குறிப்பிட்டனர்.

இது குறித்து அமைச்சர் மகேஸ்வரன் மற்றும் உயர் அதிகாரிகள் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். 52)

# பேச்சுக்களுக்கு முஸ்லிம் தரப்பில் சுயாதீனக் குழு வேண்டுமாம்!

தாய்லாந்தில் நடைபெறவுள்ள அரசு- புலிகள் பேச்சுகளின் போது அரச தரப்பில் முஸ்லிம் மக்களின் சார்பாக ஒரு சுதந்திரமான குழுவொன்றே பங்கு பற்ற வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித்தலைவர் ஹிஸ்புல்லாஹ் பிரதமரிடம் கோரிக்கை விடுக்கவுளளதாக அக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது அரச தரப்பில் முஸ்லிங்களின் சார்பில் அமைச்சர் ஹக்கீம் கலந்து கொள்வதை எதிர்த்தே இவர் பிரதமரிடம் மேற்படி கோரிக்கையை விடுக்கவுள்ளதாக தெரிய வருகிறது.

பேச்சுகளின் போது முஸ்லிம்கள் தரப்பில் கலந்து கொள்ளும் சுதந்திரமான குழுவினர் முஸ்லிம்களுக்கு தனி அலகு வழங்கப்படுவது குறித்தும் பேச வேண்டும் என்றும் ஹிஸ்புல்லாஹ் கருத்து தெரிவித்தார்.

# காங்கிரசின் தழிழன் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் காங்கிரசின் வெளியீடுகளில் ஒன்றாகிய 'தமிழன்' மாதாந்த இதழ் மிக விரைவில் வெளிவரவுள்ளது

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் வெளிவர இருக்கும் இவ்விதழை மேற்படி கட்சியின் பிரிவு வெளியிடுவதற்கு தீர்மானித்திருப்பதாக கட்சியின் பிரச்சார செயலாளர் இளங்கோ தெரிவித்தார்.

# 10 ஆம் ஆண்டு நிறைவு

முத்துஐயன்கட்டு புனித பூமி சிறுவர் நலன் காப்பகத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவும், புதிய கட்டிடத் திறப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. போரில் தாய் தந்தையரை இழந்த 125 மாணவர்கள் இந்த காப்பத்தில் தங்கவைக்கப்பட்டு கல்வி கற்பிக்கப்படுகின்றனர்.(த)

## இராணுவத் ....

மேலும் எம்மிடம் கருத்துப் பரிமாறுகையில், 'நான் இராணுவத்தில் 1995 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இணைந்தேன். ஏழ்மை காரணமாகவே நான் படையில் இணையவேண்டிய நிலை ஏற்பட்டது. எனக்கு மாத்தறையில் மூன்று மாதப் பயிற்சி வழங்கப்பட்டது. என்னுடன் 43 பேர் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். பயிற்சியின் பின் நான் யாழ். தீவகப் பகுதிக்கு அனுப்பப்பட்டேன். மண்கும்பான், மண்டைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் சுமார் மூன்றாண்டு காலம் பணியாற்றினேன். எனக்கு 1998ஆம் ஆண்டு லீவில் வீட்டுக்குச் செல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

வீடு சென்ற எனக்கு மீண்டும் இராணுவத்தில் இணைய மனம் இடம் கொடுக்கவில்லை. எனது இளம குடும்பத்தில் மூத்த மகனுக்கு நாலரை வயதேயாகிறது. இரண்டாவது மகனுக்கு நான்கு மாதம் மனைவிக்கு 22 வயது. இவர்களை விட்டு படைக்குத் திரும்பி வர மனம் வரவில்லை. குடும்ப நிலையும் இடம் கொடுக்கவில்லை. தொழிலை மாற்றி விவசாயம் செய்து பிழைக்க திட்டமிட்டு விவசாயியாக மாறினேன் நான்கு வருடங்கள் சுதந்திரமாக விவசாயம் செய்தேன்.

இவ்வேளையில் தப்பியோடிய படையினரைத் தேடித்திரிந்த பொலீஸாரிடம் கடந்த ஜூன் மாதம் 28ஆம் திகதி சிக்கினேன். பனாகொடை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து ஜூலை 30ஆம் திகதி மயிலிட்டி 55ஆம் பிரிகேட் முகாமுக்கு பணிக்காக அனுப்பப்பட்டேன். எனக்கு ஆறு மாதத்தில் ஒரு தடவையாக மட்டும் பத்தாயிரம் ரூபா தந்தார்கள். இக்காலப் பகுதியில் எனக்கு வேறு எந்தக் கொடுப்பனவும் தரப்படவில்லை. இதைக் கொண்டு எனது குடும்பத்தைக் காப்பாற்ற முடியாது என உணர்ந்தேன். விவசாயம் செய்து பிழைத்தால் இதை விட அதிகமாக என்னால் சம்பாதிக்க முடியும் என்று சிரித்தவாறே கூறினார்.

புலிகளிடம் சரணடைவது என முடிவெடுத்தமைக்கு என்ன காரணம் எனக் கேட்டபோது

எனக்குப் புலிகளிடம் நம்பிக்கை உண்டு. எனது விருப்பத்தை அவர்கள் நிறைவேற்றி வைப்பர் என உறுதியாக நம்பினேன் என்றார். மற்றுமோர் கேள்விக்குப் பதிலளித்த அவர் எல்லோருமே மக்கள்தான். எல்லோரும் சம உரிமையுடன் வாழ்ந்தால் பிரச்சினையில்லை என்றார். புலிகள் செய்த இந்த உதவியை என்றும் மறக்கவே மாட்டேன் எனவும் அவர் இறுதியில் கூறி விடைபெற்றார். (56)

## தமிழ் அரசியற்....

தமிழ் அரசியற் கைதிகள் உயிருடன் போராடுகையில் - சாதாரண மனிதனாகக் கூட எமது உணர்வுகளை நாம் வெளிப்படுத்த வேண்டும்.

பாராளுமன்றம் கூடும்போது எமது எதிர்ப்பை நாம் வெளிக்காட்டுவோம். பாராளுமன்ற விதிகளை மதிக்காமைக்காக என்னை பாராளுமன்றத்தை விட்டு வெளியேற்றினாலும் நான் கவலைப்படப் போவதில்லை. என்றும் சிவாஜிலிங்கம் கூறினார்.

## புலிகளுக்குப்.....

இதே வேளை சுமார் 170 புலிகள் வாகரையிலிருந்து முல்லைத்தீவு நோக்கி கடல்வழியாக புறப்பட்டனர்.

## புலிகளிடம்....

புலிகளின் அரசியல் துறைச் செயலகத்தை பொதுமக்கள் உதவியுடன் கண்டுபிடித்து அங்கு சென்று புலிகளிடம் சரணடைந்தார்.

இவரை விடுதலைப்புலிகள் நேற்று மாலை 5.15 மணியளவில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் கையளித்தனர். விடுவித்த படைச் சிப்பாய்க்கு விடுதலைப் புலிகள் சார்பில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியினால் சிறு அன்பளிப்புப் பொருள் ஒன்றும் வழங்கப்பட்டது. (56)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலாவணிகளுக்கான நாணயமாற்று விகிதங்களின் விபரம் வருமாறு

| | கொள்வனவு விலை(ரூ.ச.) | விற்பனை விலை(ரூ.ச.) |
|---|---|---|
| 1அமெரிக்க டொலர் | 95.97 | 96.46 |
| 1ஸ்ரேலிங் பவுண் | 150.28 | 151.61 |
| 1யூரோ | 94.40 | 95.43 |
| 1சுவிஸ் பிராங் | 64.61 | 65.41 |
| 1அவுஸ்ரேலிய டொலர் | 51.07 | 52.95 |
| 1ஜப்பானிய யென் | 0.77 | 0.78 |
| 1சவூதி றியால் | 25.67 | 25.67 |